பக்கங்கள்:13 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 19 வியாழக்கிழமை 04.08.2022 கதிர் 272

இனி இது ரகசியம் அல்ல!

இன்று நான் புதிதாக என் கருத்தாக எதுவும் தரப்போவதில்லை. சர்ச்சைக்குரிய ஒரு விடயம் தொடர்பாக சர்ச்சைக்குரியவரே தனது வார்த்தைகளில் கூறும் கருத்தை முதலில் உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நடந்து முடிந்த ☞2

# சர்வகட்சி தேசிய வேலைத் திட்டம்; கூட்டமைப்பு முழுமையான ஆதரவு!

## ஜனாதிபதி ரணிலிடம் நேரில் தெரிவிப்பு



கொழும்பு ,ஓகஸ்ட் 04

நாட்டில் பொருளாதார, சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான சர்வகட்சிகளின் தேசிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். ☞2

# பழிவாங்காதீர்!

## ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டுமே தவிர, அவசரகால நிலையின் மூலமான அதிகாரங்களைப் பயன்படுத்தி விமர்சகர்களைப் பழிவாங்குவதில் கவனம் செலுத்தக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாட்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதற்கு உரியவாறான தீர்வை வழங்கவேண்டும். முறையற்ற பொருளாதார நிர்வாகத்தையும் தவறான ☞2

# காணாமல்போனோர் அலுவலக ஆணையாளர் இருவர் நியமனம்


காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களாக மாதவ் ஜெயவர்த்தன மற்றும் சம்பத் பெரேரா ஆகியோரின் பெயர்கள் நாடாளுமன்றக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்தினால் நியமனக்கடிதங்கள்வழங்கப்பட்டிருக்கின்றன.

காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களாக செயற்பட்டு வந்த வைத்தியர் விஜயமானே தனது ஆணையாளர் பதவியினை துறந்திருந்தார். மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சிராஸ் நூர்தீன் அண்மையில் தமது ஆணையாளர் பதவியினை இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மேற்படி இருவரும் நியமனம் செய்யப்பட்டு உள்ளார்கள். காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சட்டத்தின் பிரகாரம் ஏழு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் அண்மையில் தனது பதவியினை ☞2

# தொற்றில் எண்மர் சாவு 122 பேருக்கு கொவிட்!



நாட்டில் நேற்று முன்தினம் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி 8 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அவர்களுள் 60 வயதிற்கு மேற்பட்ட 3 ஆண்களும் மற்றும் 1 பெண்ணும் உள்ளடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட 4 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்றைய தினம் மேலும் 122 பேருக்குக் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# காலி முகத்திடல் போராட்டம்; வெளியேற நாளை வரைக் கெடு



காலி முகத்திடல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் அமைப்புகளை உடனடியாக அகற்றுமாறு பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நாளை மாலை 05.00 மணிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்குமாறு கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு அமைவாகவும், பொதுமக்களுக்கு தொந்தரவு ஏற்படாத வகையிலும் செயற்பட வேண்டும் எனவும் கோட்டை பொலிஸார் மேலும் அந்த ☞2

# ஜோசப் ஸ்டாலின் கைது!



கொழும்பு ,ஓகஸ்ட் 04

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று மாலை சங்கத்தின் அலுவலகத்தில் வைத்து கொழும்பு கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த மே மாதம் 28ஆம் திகதி லங்கா வங்கி மாவத்தையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற உத்தரவைமீறியகுற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழரின் அபிலாசைகளை முன்னகர்த்தும் தளமாக சர்வ கட்சி அரசைப் பயன்படுத்த டக்ளஸ் அழைப்பு

## ஜனாதிபதியின் உரையைக் காத்திரமாக பற்றிக் கொள்ளவும் வலியுறுத்தல்

கொழும்பு, ஓக.04

ஜனாதிபதியின் (நேற்றைய) கொள்கை விளக்க உரையை காத்திரமாக முன்னெடுத்துச் சென்று, பொருளாதார சவால்களை தீர்க்கின்ற முயற்சிகளுக்குச் சமாந்தரமாக, தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புக்களுக்கானதீர்வுகளையும் முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை தமிழ் தரப்புக்கள் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் நேற்று ஆற்றிய உரை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் –

தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் ஜனாதிபதியின் உரையில் பிரதிபலித்திருக்கின்றமையை வரவேற்கிறோம். இந்த விடயங்கள் படிப்படியாக முன்னுரைமை அடிப்படையில் நிறைவேற்றப்படுவதற்கு, பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும். – எனவும் தெரிவித்துள்ளார்.



மேலும், இந்த உரையில், ஈ.பி.டி.பி. கட்சியினால் அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் முன்வைக்கப்பட்டிருந்த, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதித் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு வாக்களித்தது என்பது தொடர்பில் சர்ச்சை நீடிப்பது தெரிந்ததே.

நேற்று புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து விட்டு வந்த பின்னர், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறிய தகவலை வார்த்தைக்கு வார்த்தை அவரின் சொற்களிலேயே அப்படியே கீழே தருகிறேன். சுமந்திரன் கூறிய விடயம் வருமாறு:-

நேற்றைய பேச்சின் முடிவில் கடைசியாக பெரிய குண்டு ஒன்றை ஜனாதிபதி தூக்கி போட்டு இருக்கின்றார். இறுதியில் முடிவுரை சொல்லும் போது நான் ஒரு விடயத்தைக் கூறினேன். 'நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை. ஆனால் நீங்கள்தான் ஜனாதிபதி. அந்த ஜனாதிபதிப் பதவியில் இருப்பவருடன்தான் நாங்கள் பேச வேண்டும்' என்று நான் கூறத் தொடங்கியதுமே அவர் (ஜனாதிபதி) குறுக்கிட்டார். 'இல்லை, நீங்கள் எல்லோரும் எனக்கு வாக்களிக்காமல் விடவில்லை' என்று உறுதியாகச் சொன்னார் அவர்.

அப்போது நான் பதில் தந்தேன். 'இல்லை, நாங்கள் தீர்மானித்து, தீர்மானம் எடுத்து, அதன்படிதான் பத்துப் பேரும் வாக்களித்தோம்' என்றேன். அப்போதும் அவர் மீளவும் குறுக்கட்டு 'இல்லை, இல்லை. உங்களில் சில பேர் தமிழ் மக்களின் நன்மை கருதி எனக்கு வாக்க ளித்துள்ளீர்கள்' - என்று சொன்னார்.

'அப்படித்தான் ஹரீன் பெர்னாண்டோவும் கூறியிருக்கின்றார். நீங்களும் இப்போது கூறுகின்றீர்கள்' என எங்களில் ஒருவர் கூற, 'ஆமாம். அது சரிதான்' என்றார் ஜனாதிபதி.

அப்போது சித்தார்த்தன் குறுக்கிட்டு 'அது எப்படி உங்களுக்கு தெரியும்? நாங்கள் அளித்தது இரகசிய வாக்கெடுப்பு அல்லவா?' என்று கேட்டார். 'அது எனக்கு தெரியும். யார்,யார் வாக்களித்தனர் என்ற விவரம் என்னிடம் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினர் எப்படி வாக்களித்தனர் என்ற பட்டியலும் என்னிடம் உள்ளது' என்றார் ஜனாதிபதி.

இது ஒரு சீரியஸான விடயம். வாக்களிப்பு முடிந்ததும் ஹரீன் பெர்னாண்டோ எங்களில்ஐந்துபேர்மாறிவாக்களித்தனர் என்று கூறியிருந்தார். அப்படி இருக்க முடியாது என்று நான் சொன்னேன். ஆனால் ஜனாதிபதி இப்போது அடித்து கூறுகின்றார். ஆகவே இது குறித்து நாங்கள் ஆழமாகச் சிந்தித்து ஆராய வேண்டும்.

- இவ்வளவுதான் சுமந்திரனின் வார்த்தைகளில் அமைந்த கூற்று.

நாங்கள் பத்திரிகைகளில் பல உண்மைகளை அம்பலப்படுத்திய போதும் அவை குறித்து சளாப்பல் கருத்துகள் கூறிச் சமாளித்தவர்கள், இப்போது நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முகத்துக்கு நேரே உண்மைகளைப் போட்டு உடைத்த போது தடுமாறுகிறார்கள். அவ்வளவுதான்!

- மின்னல் -

## காணாமல்போனோர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராஜினாமா செய்தபோது இவ்வலுவலகத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் அமைச்சரவைத்தலையீடு போன்றன அலுவலக சுயாதீனத்துவத்தினைப்பாதிப்பதாக சுட்டிக்காட்டி தனது இராஜினாமா கடிதத்தை கையளித்திருந்தார் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இவ்வலுவலகத்தின் ஆணையாளராக கடமையாற்றுகின்ற தகனேகல இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடந்த வாரம் நியமனம் பெற்றிருப்பதுவும் இங்கு அவதானிக்கத்தக்கது.

இந்நிலையில் புதிதாக நியமனம் பெற்ற சட்டத்தரணிகள் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் சட்டத்தரணி மகேஸ் கட்டுலந்த, ஓய்வு பெற்ற நீதிபதி. ஆர்பா தாஸிம், யோகராஜா, ஓய்வு பெற்ற காவல்துறை மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்னே, கனேகல ஆகியோருடன் இணைந்து பணியாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வகட்சி தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதியின் அழைப்புக்கு இணங்க அவரைக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் நேற்று மாலை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சுகவீனம் காரணமாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை. அதே வேளை, தவராசா கலையரசன் எம்.பியும் இதில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

ஜனாதிபதி செயலகத்தில் ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர் தனவும் கலந்துகொண்டார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா, ஜனாதிபதியிடம் தெரிவிக்கும்படி கூறிய விடயங்களை நான் அப்படியே ஜனாதிபதியிடம் கூறினேன்.

அதற்கமைய சர்வகட்சிகளின் தேசிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என்று தெரிவித்தேன்.

தேசியவேலைத்திட்டம்தயாரிக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்கும் என்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

அரசமைப்பின் 22ஆவது திருத்தம், புதிய அரசமைப்பு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் இதன்போது பேசினோம்.

உடனடிப் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பேசும்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தோம். இந்தக் கோரிக்கையைத் தான் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் கோரினோம். அதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

காணி விவகாரம் தொடர்பிலும் பேசினோம். வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தும்படியும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்குமாறும் கோரினோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார் - என்றார்.

## பழிவாங்காதீர்!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்மானங்களையும் மேற்கொண்ட ஆட்சியாளர்கள் பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தி கடந்த 4 மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த மக்களின் தன்னெழுச்சிப்போராட்டங்களைத்தொடர்ந்து தற்போது நாட்டில் பல்வேறு அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இருப்பினும் அப்போராட்டங்களின் முன்னரங்கில் நின்று இயங்கிய செயற்பாட்டாளர்கள் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டும், தேடப்பட்டும் வருகின்ற பின்னணியில் இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே கங்குலி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

'இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் ஏற்கனவே இடம் பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. அந்த வலுவான கோரிக்கையே மிகவும் உயர்மட்டத்திலிருந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்வதற்கு வழிவகுத்தது.

எனவே அவர்களை வெற்றிகண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் உரிமைகளை உறுதிசெய்ய வேண்டுமே தவிர, விமர்சகர்களை அமைதிப்படுத்துவதற்காக அவசர காலநிலை பிரகடனத்தின் கீழான அதிகாரங்களைப் பயன்படுத்தி பழிவாங்குவதில் கவனம் செலுத்தக்கூடாது என்று அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆஸ்திரேலியா - இலங்கை மாணவர் கல்வி நிதிய உதவி

ஆஸ்திரேலியாவில் கடந்த 34 வருடங்களாக இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெற்று வரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கான2022ஆம்ஆண்டுக்கான முதல் ஆறுமாதங்களுக்குரிய நிதிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு , அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் மேற்கு இலங்கையில் கம்பகா மாவட்டம் ஆகியவற்றில் வறுமைக்கோட்டில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு இந்நிதியம் உதவி வருகின்றது.

முன்னர் நீடித்த போரால் தந்தையை அல்லது குடும்பத்தின் மூல உழைப்பாளியை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியம், கடந்த சில வருடங்களாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் தேர்ந்தெடுத்து உதவி வருகின்றது.

கடந்த காலங்களில் கொவிட் பெருந்தொற்றைக் கவனத்தில்கொண்டு இந்த மாணவர்களின் குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொதிகளை வழங்கிய கல்வி நிதியம், இந்த ஆண்டு தொடக்கம் இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில்கொண்டு மாணவரின் நிதிக்கொடுப்பனவையும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம் மாணவர்கள் மாதம் ஒன்றுக்கு இலங்கை ரூபாவில் மூவா



யிரம் ரூபா பெற்று வருகின்றனர்.

அவர்களின் கல்வி சார்ந்த தேவைகளுக்காக உதவும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த தன்னார்வத் தொண்டை நடத்திவருகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை கம்பகா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் அதிபர் புவநேஸ்வரராஜா தலைமையில் நடந்த நிகழ்வில் மாணவர்களுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான முதல் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது.

மாணவர்களின் தாய்மாரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாணவர் தொடர்பாளரான ஆசிரியை செல்வி வி. லோஜினி இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

## காலி முகத்திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அறிவுறுத்தல்களின்படி செயல்படாத நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோட்டை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொதுமக்களின் உரிமைகள் பறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## தமிழரின் அபிலாசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மற்றும் காணிப் பிரச்சினைகள், யுத்தப் பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் உட்பட்ட விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

"இதனை எமது தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கும் அரசியல் அணுகு முறைகளுக்குமான வெற்றியாகவே கருதுகின்றோம்.

"இவ்வாறான சூழல்களை ஏனைய தமிழ் தரப்புக்களும் எமது மக்களின் அபிலாசைகளை முன்னகர்த்துவதற்கான சந்தர்ப்பங்களாக பயன்படுத்த வேண்டும்.

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினையும் அதற்கு பின்னர் கிடைத்த சந்தர்ப்பங்களையும் தமிழ் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ளத் தவறியமையினால் எமது மக்கள் பேரவலங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போது கிடைத்துள்ள வாய்ப்பினை தமிழ் தலைமைகள் காத்திரமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

குறிப்பாக ஜனாதிபதியினால் உருவாக்க முயற்சிக்கப்படுகின்ற அனைத்துக் கட்சி அரசாங்கத்தினை தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னகர்த்துவதற்கான ஆரோக்கியமான தளமாக அனைத்து தமிழ் தரப்புக்களும் பயன்படுத்த வேண்டும். எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்பு பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வடக்கிற்குப் புரியவில்லை

**இதுவரை நடந்தவை நன்றாகவே நடந்துள்ளன. ஆங்கிலத்தில் அதனை So far so good ஏன்பார்கள்.**

**சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பு, நடவடிக்கை, முன்னாயத்த ஏற்பாடுகள் என்று இதுவரையான சகலவையும் நன்றாகத்தான் – குறை சொல்ல முடியாத அளவுக்குத்தான் – முன்னேறியிருக்கின்றன.**

**நாடாளுமன்றத்தில் தாம் ஆற்றிய தமது அரசின் முதலாவது கொள்கை விளக்க உரையில் தமது சர்வகட்சி அரசு தொடர்பான முன்னறிவிப்புக்குக் காத்திரமாக இடமளித்திருக்கின்றார் அவர்.**

**நாடு எதிர்நோக்கியுள்ள அரசியல், பொருளாதார, சமூக நெருக்குவாரங்களில் இருந்து மீண்டெழுவதற்கு ஒற்றுமைப்பட்ட சர்வகட்சி அரசு அவசியம் என்பதை வலியுறுத்தி, அவர் நேற்றைய உரையில் வெளியிட்ட கருத்துகள் தெற்கிலும் சர்வதேச பார்வையாளர்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்பது கண்கூடு.**

**இத்தகைய அழைப்பை – அதையொட்டி புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட காய் நகர்த்தலை – புறக்கணித்து ஒதுக்க முடியாத இக்கட்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றவற்றுக்கும் கூட ஏற்பட்டுள்ளது.**

**இத்தகைய பொது முயற்சிகளில் கூட்டுச் சேரவே முடியாத இரண்டு தரப்புகள் யாவை என்பது எல்லா அவதானிகளுக்கும் நன்கு தெரியும். தெற்கில் ஜே.வி.பி. யினர். வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர். வழமை போல அவை தாங்கள் 24 கரட் சொக்கத் தங்கங்கள் என்றும், தாம் பித்தளை எனக் கருதும் ரணில் போன்றோருடன் தங்களின் சொக்கத் தங்கங்கள் சேர்ந்து கெட்டுப் போக இணங்கா என்றும் பிதற்றுகின்றன. ஆகவே அவர்களை விடுத்துத்தான் – விலத்தித்தான் – ஐக்கிய முயற்சியை நோக்க வேண்டிய சூழல் உண்டு.**

**நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நெருக்கடிக்கு முகம் கொண்டு மீண்டெழுவதாயின் பிரதான அரசியல் தரப்புகள் தங்களது அரசியல் வேறுபாடுகளை சற்று ஒதுக்கி வைத்து விட்டு, ஒன்றுபட்டுச் செயற்படுவது காலத்தின் கட்டாயம்.**

**நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் பெயரில் பெரிய அணி எதனையும் கொண்டிராத ரணில் விக்கிரமசிங்கதான், இன்றைய நிலையில் அப்படி ஒரு ஐக்கிய முயற்சிக்குத் தலைமை தாங்குவதற்கு தார்மீக ரீதியிலும், அனுபவத்திலும், பிற தரப்புகளின் ஏற்பிலும் பொருத்தமானவர். மிகப்பொருத்தமானவர். அவர் தலைமை ஏற்றிருக்கின்றார். முன் முயற்சிகளை ஆரம்பித்திருக்கின்றார். இப்போதைய நெருக்கடியைத் தாண்டுவதற்காகத் தென்னிலங்கையும் அரசியல் வேறுபாடுகளை சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, இணக்க முயற்சிகளுக்கு பச்சைக் கொடி அசைத்து முன்நகருகின்றது.**

**அங்கு தேசிய ரீதியில் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடி என்றால் – இங்கு, தமிழர் தாயகத்தில் தமிழரின் தேசிய இருப்புக்கே நெருக்கடி.**

**முழு நாட்டின் நெருக்கடியை எதிர்கொள்ள முழு நாடாக இலங்கைத்தீவு ஒன்றுபடத் தயாராகின்றது. அதன் போக்கை நாம் இப்போது பார்க்கிறோம்.**

**ஆனால், அதே போன்ற சிக்கலுக்கள் மாட்டியிருக்கும் தமிழ்த் தேசியத்தை மீட்டெடுக்கத் தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றுபடவில்லை. மாறாக, மேலும் மேலும் பிளவுகளை கூட்டி, தமிழர் தேசத்தை சின்னாபின்னமாக்குவதையே தலையாய கடமையாகக் கங்கணம் கட்டி ஆற்றுகின்றன. இது தமிழர் தேசத்ததின் தலைவிதி.**

**தெற்குக்குப் புரிந்தது, வடக்கு – கிழக்குக்குப் புரியவில்லை. வேற்றுமையிலும் ஒற்றுமை காணத் தெரியவில்லை.**

# சீனக் கப்பல் வருகையை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்!

## செல்வம் வலியுறுத்து



இலங்கை பொருளாதார ரீதியாக நலிவடைந்து மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஒரு ராஜதந்திர நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் செயற்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இந்தியா பெரும் பங்கு வகிக்கின்றது.

சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் இலங்கை நோக்கி வருவதை இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கு பாதுகாப்புப் பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது.

இந்திய மீனவர்களின் வருகை என்பது கவலையான விடயமாக இருந்தாலும் தமிழ் பேசும் சமூகமாகிய நாங்கள் இந்தியாவை ஒருபோதும் கைவிட முடியாது.

அண்மையில் சீனாவினுடைய தூதுவர் இங்கு வந்து ஒரு சர்ச்சையைக் கிளப்பிச் சென்ற பின்னணியில் பல எதிர்ப்புகளை எமது மக்கள் காட்டியிருந்தார்கள்.

ஆகவே, இலங்கை அரசாங்கம் ராஜதந்திர நடவடிக்கையாக இரண்டு நாடுகளையும் சாதகமாக வைத்திருக்க வேண்டும் என்றால் இந்தியாவைப் பகைக்கக் கூடாது என்பது எமது கருத்தாகும்.

பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற இலங்கைக்கு இந்தியா பல உதவிகளை அண்மைக்காலமாகச் செய்து வருகிறது.

எமது தமிழர்களைப் பொறுத்தமட்டில் இந்தியா தான் எமக்கான தீர்வைப் பெற்றுத் தரக்கூடியதும் எங்களுக்கு குரல் கொடுக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாகவும் இருக்கின்றது.

இந்த நிலையில், சீனாவின் வேவு பார்க்கும் கப்பல் வருகையை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையெனில் இந்தியா இலங்கையை விட்டு அதிக தூரம் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இந்தியாவைப் பகைப்பதால் இலங்கைக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது. அதைத் தமிழர்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. – என்றார்.

# அவசரகாலநிலை அதிகாரங்களை பயன்படுத்தி விமர்சகர்களை ரணில் பழிவாங்கக் கூடாது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து



மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களே ராஜபக்ஷவின் இராஜினாமாவிற்கு வழிவகுத்தன.

எனவே புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமே தவிர, அவசரகாலநிலையின் மூலமான அதிகாரங்களைப் பயன்படுத்தி விமர்சகர்களைப் பழிவாங்குவதில் கவனம் செலுத்தக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதற்கு உரியவாறான தீர்வை வழங்கவேண்டும் என்றும், முறையற்ற பொருளாதார நிர்வாகத்தையும் தவறான தீர்மானங்களையும் மேற்கொண்ட ஆட்சியாளர்கள் பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தி கடந்த 4 மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த மக்களின் தன்னெழுச்சிப்போராட்டங்களைத் தொடர்ந்து தற்போது நாட்டில் பல்வேறு அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இருப்பினும் அந்தப் போராட்டங்களின் முன்னரங்கில் நின்று இயங்கிய செயற்பாட்டாளர்கள் பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டும், தேடப்பட்டும் வருகின்ற பின்னணியில் இது தொடர்பாகத் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மீனாக்ஷி கங்குலி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

"இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் ஏற்கனவே இடம்பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. அந்த வலுவான கோரிக்கையே மிகவும் உயர்மட்டத்திலிருந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்வதற்கு வழிவகுத்தது.

"எனவே அவர்களை வெற்றிகண்ட (வென்ற) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் உரிமைகளை உறுதிசெய்யவேண்டுமே தவிர, விமர்சகர்களை அமைதிப்படுத்துவதற்காக அவசரகாலநிலை பிரகடனத்தின் கீழான அதிகாரங்களைப் பயன்படுத்தி பழிவாங்குவதில் கவனம் செலுத்தக்கூடாது" – என்று அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாக சமன் ரத்னப்பிரிய நியமிக்கப்பட்டார்



தொழிற்சங்க செயற்பாட்டாளரான சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்பின் 41(1) சரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# ஆற்றல் மற்றும் உணவு நெருக்கடியை உலகம் இப்போது எதிர்கொண்டுள்ளது

## ஷங்காய் கூட்டாண்மை மாநாட்டில் ஜெய்சங்கர் அபாய எச்சரிக்கை



கொவிட் தொற்றுநோய் மற்றும் உக்ரைன் மோதலின் இடையூறுகளால் உலகம் ஆற்றல் மற்றும் உணவு நெருக்கடியை எதிர்கொள்கிறது என்றும், இது 'மிக அவசரமாக' கவனிக்கப்பட வேண்டிய உலகளாவிய பிரச்சினை என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

உஸ்பெகிஸ்தானில் உள்ள தாஷ்கண்டில் "ஷங்காய் கூட்டாண்மை இயக்கத்தின்' வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

ஜெய்சங்கர் தேவையான செயற்பாடுகளில் நெகிழ்ச்சியான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட விநியோகச் சங்கிலிகள் மற்றும் சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மை ஆகியவை அடங்கும் என்றார். மேலும், பயங்கரவாதத்தின் அனைத்து வெளிப்பாடுகளிலும் சகிப்புத்தன்மை இல்லாதது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் நிலைப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார். அங்கு கோதுமை, மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் ஆடைகள் உள்ளிட்ட இந்தியாவின் மனிதாபிமான ஆதரவு வழங்கல் தொடர்வதை அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் ஷங்காய் கூட்டாண்மை இயக்கத்தின் பொருளாதார எதிர்காலத்திற்கான சாபஹர் துறைமுகத்தின் திறனை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் குறித்தும் அவர் பிரஸ்தாபித்தார். ஸ்டார்ட் அப்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருத்தத்தை வலியுறுத்திய அவர் பாரம்பரிய மருத்துவத்தில் ஒத்துழைப்பு என்பது ஷங்காய் கூட்டாண்மை இயக்கத்தின் உறுப்பினர்களின் பொதுவான நலனில் உள்ளது என்றார்.

இந்த ஆண்டு செப்டெம்பரில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளக்கூடிய சமர்கண்ட் உச்சி மாநாட்டிற்கு தயார்ப்படுத்துவதில் வெளியுறவு அமைச்சர்களின் இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று அவர் விவரித்தார்.

சீன வெளியுறவு மந்திரி வாங் யீ மற்றும் அவரது ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், ஷங்காய் கூட்டாண்மை இயக்கத்தின் நாடுகளின் சகாக்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வெள்ளிக்கிழமை உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பிராந்திய மாநாட்டில்ஜெய்சங்கரும்வாங்கும்கலந்துகொண்டனர்.

இலங்கையில் உள்ள ஒரு மூலோபாய துறைமுகத்திற்கு( அம்பாந்தோட்டைக்கு) சீன இராணுவக் கப்பலின் திட்டமிடப்பட்ட விஜயம் குறித்து புது டெல்லி கவலை தெரிவித்த ஒரு நாள் கழித்து, வியாழனன்று, இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர், சீனக் கப்பலின் வருகையை அரசாங்கம் கண்காணித்து வருவதாகக் கூறினார், புதுடெல்லி அதன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி 'ஷங்காய் கூட்டாண்மை இயக்கம்' தற்போது எட்டு உறுப்பு நாடுகளை (சீனா, இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான்) கொண்டுள்ளது, நான்கு பார்வையாளர் நாடுகள் முழு உறுப்பினர் (ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான் மற்றும் மங்கோலியா) மற்றும் ஆறு 'உரையாடல் பங்காளிகள்' (ஆர்மீனியா, அஜர்பைஜான், கம்போடியா, நேபாளம், இலங்கை மற்றும் துருக்கி) உள்ளனர்.

# நீர்மூழ்கி எதிர்ப்பு போர் ஹெலிகள் இந்தியக் கடற்படையில் இணைவு



இந்தியக் கடற்படைக்கு வியாழன் அன்று 'மெகா பூஸ்ட்' கிடைத்தது.

இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலான விக்ராந்த் படைக்கு வழங்கப்பட்டது மட்டுமல்லாமல், அமெரிக்காவிலிருந்து இரண்டு "MH - 60 ரோமியோ' ரக நீர்மூழ்கி எதிர்ப்பு போர் ஹெலிக்கொப்டர்கள் வந்து சேர்ந்தன.

இந்த ரகத்தில் 'MH - 60 ரோமியோக்களில்' மொத்தம் 24 ஹெலிக்கொப்டர்கள் 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவிற்கு வழங்கப்பட உள்ளன. அவை விமானம் தாங்கி கப்பல்களான விக்ராந்த் மற்றும் விக்ரமாதித்யா ஆகியவற்றில் இருந்தும் மற்ற மேற்பரப்பு கப்பல்களில் இருந்தும் இயக்கப்படும்.

இரண்டு ஹெலிக்கொப்டர்களும் அமெரிக்க விமானப்படையின் E - 17 ரக விமானத்தில் கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கின.

இந்த ஹெலிக்கொப்டர்களில் இன்னும் ஒன்று அடுத்த மாதம் வழங்கப்படும்.

இந்த மூன்றும் கடந்த ஆண்டு இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்ட மூன்றில் இருந்து வேறுபட்டவை. அவை பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றன.

இதற்கிடையில், விக்ராந்தின் சுவீகாரம் இந்தியாவிற்கு ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது. விமானம் தாங்கிக் கப்பல்களை உருவாக்கும் திறன் கொண்ட அமெரிக்கா மற்றும் சீனா உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளுடன் இப்போது இந்தியாவும் இணைந்துள்ளது.

76 சதவீத உள்நாட்டுமயமாக்கல் கூறுகளுடன் கட்டப்பட்ட விமானம் தாங்கிக் கப்பலான விக்ராந்த், அடுத்த மாதம் இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கொண்டாடும் போது, ஐ.என்.எஸ். விக்ராந்தாக இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ரோமியோ ஹெலிகள்

ரோமியோ என்று அழைக்கப்படும் இந்த ஹெலிக்கொப்டர் அமெரிக்க நிறுவனமான லொக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. மேலும் இது பல பயணங்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட அனைத்து வானிலை வாகனமாகும்.

இந்த ரகத்தில் 24 ஹெலிக்கொப்டர்களை 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து வெளிநாட்டு இராணுவ விற்பனையின் (எவ்.எம்.எஸ். இன்) கீழ் இந்தியா ஓடர் செய்தது.

இந்த ஹெலிக்கொப்டர்கள் 'ஹெல்பயர்' ரக வானிலிருந்து தரை நோக்கிய ஏவுகணைகள் மற்றும் மார்க் 54 நீர்மூழ்கி எதிர்ப்பு டார்பிடோக்கள் (நீரூடாக விரையும் ஏவுகணைகள்) உட்பட இந்தியாவிற்கு எனத் தனித்துவமான பல உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஹெலிக்கொப்டர்கள் இந்தியக் கடற்படையின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையும். இது தற்போது இந்தியாவைச் சுற்றியுள்ள கடலுக்குள் சீனாவின் அதிகரித்து வரும் ஊடுருவல்களுக்கு மத்தியில் நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவும் .

ரோமியோ ஹெலிக்கொப்டர்கள் மேற்பரப்பு – போர் எதிர்ப்பு திறன்களைக் கொண்டுள்ளன, அதாவது அவை மேற்பரப்பு அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து எதிரி கப்பல்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கும்.

நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்காணிப்பது மற்றும் அவற்றை ஈடுபடுத்துவது தவிர, இந்த ஹெலிக்கொப்டர்கள் தேடல் மற்றும் மீட்பு, தளவாட உதவி, பணியாளர்கள் போக்குவரத்து, மருத்துவ வெளியேற்றம் மற்றும் கண்காணிப்பு போன்ற பிற கடல்சார் பாத்திரங்களைச் செய்யக்கூடியவை.

# காலிமுகத்திடலில் கரையொதுங்கும் சடலங்களின் பின்னணிகள் என்ன?

## ஜனநாயகப் போராட்டங்களுக்கான பெண்கள் அமைப்பினர் கேள்வி



நாட்டில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டுவந்த தன்னெழுச்சிப்போராட்டத்தின் முன்னரங்கில் நின்று இயங்கிய செயற்பாட்டாளர்களை இலக்குவைத்து அரசாங்கத்தால் பிரயோகிக்கப்பட்டு வரும் அடக்குமுறைகளைக் கடுமையாகக் கண்டித்திருக்கும் சமூக செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர், சட்டத்தரணி ரணிதா ஞானராஜா, காலிமுகத்திடல் போராட்டக்காரர் நிலாஷினி, சமூக செயற்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட உள்ளிட்ட ஜனநாயகப் போராட்டங்களுக்கான பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், கடந்த சில தினங்களாக காலிமுகத்திடலில் கரையொதுங்கிவரும் சடலங்கள் மூலம் போராட்டக்காரர்களை அச்சுறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

நாட்டில்தீவிரமடைந்தபொருளாதாரநெருக்கடியைத் தொடர்ந்து அதற்கு உரியவாறான தீர்வை வழங்கவேண்டும் என்றும், முறையற்ற பொருளாதார நிர்வாகத்தையும் தவறான தீர்மானங்களையும் மேற்கொண்ட ஆட்சியாளர்கள் பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தி கடந்த 4 மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களைத் தொடர்ந்து தற்போது நாட்டில் பல்வேறு அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இருப்பினும் அந்தப் போராட்டங்களின் முன்னரங்கில் நின்று இயங்கிய செயற்பாட்டாளர்கள் பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டும், தேடப்பட்டும் வருகின்ற பின்னணியில் அமைதிவழிப்போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்து ஜனநாயகப்போராட்டங்களுக்கான பெண்கள் அமைப்பால் செவ்வாய்கிழமை கொழும்பு, மருதானையிலுள்ள சமூக மற்றும் சமய மத்திய நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அந்த அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு ஒவ்வொரு பிரதிநிதிகளாலும் வெளியிடப்பட்ட முக்கிய கருத்துக்கள் வருமாறு:

சமூக செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர் தற்போதைய அரசாங்கத்தால் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையையும்போராட்டக்காரர்களை பாசிஸவாதிகள், பயங்கரவாதிகள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களென முத்திரை குத்தி அவர்கள்மீதுஅடக்குமுறைகளைப்பிரயோகிப்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதேவேளை அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்கும், எதிர்ப்பை வெளியிடுவதற்கும் தாம் கொண்டிருக்கின்ற உரிமையைப் பயன்படுத்துபவர்களை கைதுசெய்வதற்கும், அவர்களுக்கு எதிராக சட்டத்தைப் பிரயோகிப்பதற்கும் மேற்கொண்டுவரும் முயற்சிகளை அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.

அரசாங்கத்தால் பிரயோகிக்கப்படும் இந்த அடக்குமுறை உத்திகள் எமக்குப் புதியவை அல்ல. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்த ஜனநாயக மற்றும் அமைதி வழிப்போராட்டங்களை அடக்கியதில் இலங்கை அரசாங்கம் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் வலிந்துகாணாமலாக்கப்பட்டதமது உறவுகளைத்தேடிப் போராட்டங்களை முன்னெடுத்துவந்தவர்களும், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல்களைத் தொடர்ந்து நாட்டிலுள்ள முஸ்லிம்களும் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கப்பட்டதுடன் பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளடங்கலாகப் பல்வேறு சட்டங்களின்கீழ்அவர்களுக்குஎதிராகஅடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

எனவே, கடந்தகாலங்களில்போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பில் உரியவாறு விசாரணைகளை முன்னெடுப்படுவதுடன், குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை முன்கூட்டியேநடத்துமாறும்கோரிக்கைவிடுக்கின்றோம் என்று தெரிவித்தார்.

**சட்டத்தரணி ரணிதா ஞானராஜா**

கடந்த காலங்களைப் பொறுத்தமட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதியைக்கோரி முன்னெடுக்கப்பட்டுவந்த போராட்டங்களுக்கு பாசிஸவாதச் சாயம்பூசப்பட்டு, அவை பல்வேறு அரசாங்கங்களாலும் அடக்கப்பட்டமையை அவதானித்துவந்திருக்கின்றோம். குறிப்பாக 1989 ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் அவசரகாலச்சட்டத்தின் சரத்துக்கள் மிகவும் உச்சளவில் பயன்படுத்தப்பட்டன. அதன்விளைவாகத் தற்போது பல பெண்கள் தமது தகப்பன், கணவன் உள்ளிட்ட அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்காகவும் நீதியைக்கோரியும் தொடர்ந்து போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கின்றார்கள்.

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியை நாட்டுமக்களின் ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலிருக்கின்றோம். இருப்பினும் அதற்கு அப்பால் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டிருக்கும் நிறைவேற்றதிகாரம் முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும் என்பதே எமது கூட்டு நிலைப்பாடாக இருக்கின்றது.

அதேவேளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரில் எமது பிரச்சினைகள் தொடர்பில் வலுவான அழுத்தம் பிரயோகிக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஏனெனில் பல வருடங்களுக்கு முன்னர் கையடக்கத்தொலைபேசி மற்றும் சமூகவலைத்தள வசதிகள் போதியளவிற்குக் காணப்படாமையால் அப்போதைய மனித உரிமைகள் மீறல்களை ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தவோ அல்லது அவற்றின் தீவிரத்தன்மையை உணர்த்தவோ இயலாத நிலை காணப்பட்டது.

ஆனால் இப்போது அண்மைக்காலங்களில் பதிவாகியிருக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் என்பன காணொளிகள் வடிவில் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டதன் மூலம் அவை பல்வேறு தரப்பினரையும் சென்றடைந்திருக்கின்றன. எனவே, எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் இவற்றுடன் இணைந்ததாக தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் வலுவான அழுத்தத்தைப் பிரயோகிக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார்.

**காலிமுகத்திடல் போராட்டக்காரர் நிலாஷினி**

தீவிர பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக ஒட்டுமொத்த நாட்டுமக்களும் ஒன்றிணைந்து முன்னெடுத்த அறவழிப்போராட்டத்தில் பங்கேற்ற பலர்மீது தற்போதைய அரசாங்கத்தால் பல்வேறு வடிவங்களில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன.

எம்மிடமுள்ள தகவல்களின்படி கடந்த 4 மாதகாலத்தில் போராட்டத்தில் பங்கேற்ற 300 இற்கும் மேற்பட்டோர்மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. சுமார் 100 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். சுமார் 15 பேர் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். அதுமாத்திரமன்றி 300 – 600 பேரின் வீடுகளுக்கு பொலிஸார் சென்றிருப்பதுடன் வாக்குமூலம் வழங்குமாறு அவர்களிடம் கோரப்பட்டிருக்கின்றது.

அதுமாத்திரமன்றி கடந்த சில நாளகளாக காலிமுகத்திடலில் பல சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன. இது தொடர்பாக உரியவாறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இதன்மூலம் போராட்டக்காரர்களை உளவியல் ரீதியில் அச்சுறுத்தவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவாஎன்றசந்தேகம்எழுந்துள்ளது.

அதேவேளை அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்ற போதிலும், போராட்டக்காரர்களை கடந்த 1981, 1989 ஆம் ஆண்டுகளில்அடக்கியதைப்போன்றுஅடக்கவேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ள சனத் நிரந்த உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக இன்னமும் சட்டநடவடிக்கை எடுக்கப்படவில்லை. எது எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தால் பிரயோகிக்கப்படுகின்ற அடக்குமுறைகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

**சமூகசெயற்பாட்டாளர்சந்தியாஎக்னெலிகொட**

குறிப்பாக பெருமளவான இளைஞர், யுவதிகள் உள்ளடங்கலாக நாட்டுமக்கள் அனைவரும் இணைந்து சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்த போராட்டத்தின்மீது அரசாங்கத்தால் இப்போது பல்வேறு வடிவங்களிலும் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் அமைதிவழிப்போராட்டக்காரர்களுக்கு எதிரான வெறுப்பு ணர்வுடன்கூடிய மிகமோசமான கருத்துக்களை வெளியிடும் அரசியல்வாதிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இவ்வாறானதொரு அடக்குமுறைக் கலாசாரத்தை உடனடியாக முடிவிற்குக்கொண்டுவருமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வலியுறுத்துகின்றேன்.

அதேவேளை காணாமலாக்கப்பட்ட எனது கணவர் பிரகீத் எக்னெலிகொடவிற்கு (ஊடகவியலாளர்) என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிந்து, அவருக்குரிய நீதியை நிலைநாட்டுவதற் காக நாம் தொடர்ந்தும் எதிர்பார்ப்புடன் போராடுவேன் என சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

# சுமார் 50 லட்சம் இலங்கையர்கள் ஒற்றைத் தலைவலியால் பாதிப்பு!

சுமார் 50 லட்சம் இலங்கையர்கள் தற்போது ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் வசிக்கும் நரம்பியல் நிபுணர் பேராசிரியர் திஸ்ஸ விஜேரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

24 நாடுகளின் ஒருமித்த கருத்துடன் ஆசிய பிராந்திய சிகையலங்கார சங்கத்தின் ஐந்தாவது தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விடயதைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் உள்ள சுமார் 500 கோடி மக்களை பலவீனப்படுத்தும் நரம்பியல் நோய்களில் ஒற்றைத் தலைவலியும் ஒன்றாகும் என தெரிவித்துள்ள அவர், இது மனித இயலாமைகளில் 20 சதவிகிதம் எனவும் கூறியுள்ளார். இதன் காரணமாக, இலங்கையின் மென்பொருள் வடிவமைப்பாளர்கள் குழுவுடன் இணைந்து, பேராசிரியர் திஸ்ஸ விஜேரத்ன இந்த நோயின் இருப்பை துல்லியமாக கண்டறியும் விசேட மென்பொருள் ஒன்றினையும் உருவாக்கியுள்ளார்.

# சில நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மேல் கொத்மலை, காசல்ரீ, மவுஸ்ஸாக்கலை, லக்ஷபான உள்ளிட்ட பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

மண்சரிவு காரணமாக சில வீதிகளின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

# ஜனாதிபதியின் கருத்துக்கு ஹர்ஷ டி சில்வா ஆதரவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (புதன் கிழமை) நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உரையில் இலங்கையை நவீன ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட போட்டித்தன்மை கொண்ட சமூக சந்தை பொருளாதாரமாக மாற்றுவது தொடர்பாகத் தெரிவித்தார்.

நான் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன். இதுவே எனது நிலைப்பாடு இதற்கு பாரிய சீர்திருத்தமும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளச்செய்வதும் அவசியம்.

நாங்கள் ஒன்றிணையவேண்டும், பொதுவான திட்டமொன்றின் அடிப்படையில் புதிய இலங்கையை ஏற்படுத்துவதை நோக்கி குறிப்பிட்ட காலத்திற்கு அனைவரும் அல்லது அனைத்துக்கட்சி அரசாங்கமாக நாங்கள் ஒன்றிணையவேண்டும் என ஹர்ஷ டி சில்வா டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# சீரற்ற காலநிலையால் 11 ஆயிரம் பேர் பாதிப்பு!

## மூவர் சாவு; நால்வர் மாயம் 9 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

நாட்டில் கடந்த இரு தினங்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, கேகாலை, அம்பாந்தோட்டை, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 7 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 821 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். செவ்வாய்க்கிழமை மாலை வரை 3 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதோடு, வெள்ளத்தில் சிக்கி நால்வர் காணாமல் போயுள்ளனர்.

அத்தோடு மேற்படி மாவட்டங்களில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதோடு , 257 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள 461 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 218 நபர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

### இரத்தினபுரி

இரத்தினபுரி மாவட்டத்தில் கொடகவெல, எலபாத, நிவித்திகல, கலவான, அயாகம, கஹவத்த, வெலிகபொல, இரத்தினபுரி, பலாங்கொட, பெல்மடுல்ல மற்றும் கொலன்னா ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் 1,666 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 495 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 174 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு , 80 குடும்பங்களைச் சேர்ந்த 369 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### கண்டி

கண்டி மாவட்டத்தில் பததும்பர, யட்டிநுவர, ஹதரலியத்த, ஹரிஸ்பத்துவ, தும்பனை, பதஹேவாஹட, கங்கவத்தகோரளை, தெல்தோட்டை, மெததும்பர, உடபலாத்த மற்றும் பஸ்பாக கோரள ஆகிய பிரதேச செயலகங்களில் 837 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 809 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு வெள்ளத்தில் சிக்கி ஒருவர் காணாமல் போயுள்ளார். இம்மாவட்டத்தில் 19 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு , 323 குடும்பங்களைச் சேர்ந்த 1,595 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### நுவரெலியா

நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை, அம்பகமுவ, நுவரெலியா மற்றும் அங்குராங்கெத்த ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் மண்சரிவு, மரம் முறிந்து விழுந்தமை, வெள்ளம் மற்றும் பலத்த காற்றினால் 320 குடும்பங்களைச் சேர்ந்த 1,224 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 3 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு , மூவர் காணாமல் போயுள்ளனர். அத்தோடு ஒரு வீடு முழுமையாகவும் , 41 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இங்குள்ள 58 குடும்பங்களைச் சேர்ந்த 254 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### கேகாலை

கேகாலை மாவட்டத்தில் யட்டியாந்தோட்டை, தெஹியோவிட்ட, கேகாலை மற்றும் ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவுகளில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு , 15 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

### அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டையில் ஒகேவெல மற்றும் வலஸ்முல்ல பிரதேச செயலகப்பிரிவுகளில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு , 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

### காலி

காலி மாவட்டத்தில் மதம்பாகம மற்றும் கடவத்சத்ர ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் கற்பாறை சரிந்து விழுந்தமை மற்றும் மண்சரிவால் இரு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு , இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

### யாழ்ப்பாணம்

யாழப்பாணத்தில் பலத்த காற்று காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் இந்த குடும்பத்தினர் வசித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

### நீரில் அடித்துச் செல்லப்பட்ட மூவர் மாயம்

நாவலப்பிட்டி – கெட்டபுலா பிரதேசத்தில் ஆற்றைக் கடக்க முற்பட்ட போது வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட மூவர் காணாமல் போயுள்ளனர். தேயிலைத் தோட்ட தொழிலாளர்களான குறித்த மூவரும் தொழிலுக்குச் சென்று வீடு திரும்பும் போது கயிற்றின் உதவியுடன் ஆறொன்றைக் கடக்க முற்பட்ட போது இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களில் ஆண்கள் இருவரும் பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் நீரில் அடித்துச் செல்லும் காணொலி பதிவு சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டிருந்தது. பாதுகாப்பற்ற முறையில் ஆற்றைக் கடக்க முயன்றமையே அனர்த்தத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மலையகத்தினூடான ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம்

மலையகப் பகுதியில் ஹிகுருஓயாவிற்கும் ரொசெல்லவிற்கும் இடையில் பல இடங்களில் ரயில் பாதைகளில் பாறைகள் சரிந்து விழுந்துள்ளமை மற்றும் மண்சரிவு என்பவற்றின் காரணமாக மறு அறிவித்தல் வரை அப்பகுதியூடான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய செவ்வாய் காலை கொழும்பு கோட்டையில் இருந்து இயக்கப்படவிருந்த பொடி – மெனிகே மற்றும் உடரட – மெனிகே ஆகிய ரயில்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### மண்சரிவு அபாய எச்சரிக்கை

காலி, அம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நேற்று புதன்கிழமை மாலை 3 மணி வரை நீடிக்கப்பட்டது. அத்தோடு கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கண்டிய திருமண விவாக சட்டத்தில் திருத்தங்கள்

## அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்



பராயமடையாத பெண் பிள்ளைகள் திருமணத்துக்காக பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மலைநாட்டு விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் (கண்டியர் திருமண சட்டம்) உள்ள ஏற்பாட்டை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள இது தொடர்பான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெளிவுபடுத்துகையில் –

மலைநாட்டு விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் (கண்டிய திருமண சட்டம்) திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய பராயமடையாத பெண் பிள்ளைகள் பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏற்பாடு காணப்படுகிறது. இது நாட்டில் நடைமுறையிலுள்ள வழமையான அடிப்படை சட்டத்துக்கு முரணான ஏற்பாடாகும்.

எனவே அந்த திருத்தத்தினை நீக்குவதற்கும், அதில் காணப்படும் ஒவ்வாமையை நீக்குவதற்காகவும் சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2015 இல் நான் நீதித்துறை அமைச்சராகப் பதவி வகித்த போது முஸ்லிம் விவாக – விவாகரத்து சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன்போது நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளுக்கமைய திருத்தங்களுடனான சட்ட மூலமொன்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்றி பதவி வகித்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது காதி நீதிமன்றத்தை நீக்குதல், பெண்களின் விருப்பத்தைக் கோரல், ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு புதிய சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். என்றார்.

# வெற்று எரிவாயு சிலிண்டர்களுக்கு புதிய விலையை அறிவித்தது லிற்றோ

கொழும்பு, ஒக. 04

வெற்று எரிவாயு சிலிண்டர்களின் புதிய விலையினை லிற்றோ நிறுவனம் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளது.

2.5 கிலோ சிலிண்டர் 7 ஆயிரம் ரூபாவுக்கும் 5 கிலோ சிலிண்டர் 11 ஆயிரம் ரூபாவுக்கும் 12.5 கிலோ சிலிண்டர் 14 ஆயிரம் ரூபாவுக்கும் 37.5 கிலோ சிலிண்டர் 35 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும்.

# புதுக்காட்டில் கசிப்பு உற்பத்தி செய்த இருவர் கைதாகினர்!

இராமநாதபுரம், புதுக்காடு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இராமநாதபுரம், புதுக்காடு, காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 600 லீற்றர் கோடாவும், 62 போத்தல் கசிப்பும் சிறப்பு அதிரடிபடையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரண்டு சந்தேகநபர்களையும் சிறப்பு அதிரடிப்படையினர் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்

நாட்டில் நிலவுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்புகின்ற பண அனுப்பல்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் நாடு திரும்பும் போது மேலதிக தீர்வை வரிச்சலுகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர், இது தொடர்பில் மேலும் தெளிவுபடுத்துகையில் –

நாட்டில் நிலவுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்புகின்ற பண அனுப்பல்களை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட வேண்டிய சலுகைகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக கடந்த ஜூன் 27 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானத்துக்கமைய அலுவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

மேற்படி குழுவின் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மூலம் நாட்டுக்கு முறைசார் வழிகள் மூலம் அனுப்பப்பட்ட வெளிநாட்டு பணத்தொகையை கருத்திற் கொண்டு புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு வருகை தரும் போது மேலதிக தீர்வை வரிச் சலுகை கொடுப்பனவை வழங்குவதற்கும் மற்றும் இலத்திரனியல் மோட்டார் சைக்கிளொன்றைக் கொள்வனவு செய்வதற்காக தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய நாட்டுக்கு வங்கி முறைமை ஊடாக சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிக டொலர்களை அனுப்பி வைப்பவர்களுக்கு அவர்கள் வெளிநாடுகளில் தங்கியுள்ள காலத்தின் அடிப்படையில் தீர்வை வரிச்சலுகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் புலம்பெயர் தொழிலாளர்கள் மாத்திரமன்றி, நாட்டுக்கு வெளிநாட்டு பணத்தை அனுப்பும் புலம் பெயர் இலங்கையர்களும் உள்ளடக்கப்படுவார்கள்.

தற்போதுள்ள நடைமுறையின் அடிப்படையில் எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்ய முடியாது. எனினும் 3 ஆயிரத்துக்கும் அதிக டொலர்கள் எவரேனும் ஒருவரால் அவரது வங்கிக் கணக்கிற்கு அல்லது குறித்த நபரின் உறவினர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்குமெனில் அவர்களால் அனுப்பப்பட்ட டொலரின் அரைவாசி பெறுமதியுடைய இலத்திரனியல் மோட்டார் சைக்கிளொன்றை வரி இன்றி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.



அதேபோன்று 20 ஆயிரத்துக்கும் அதிக டொலர்களை அனுப்புபவர்களுக்கு 65 ஆயிரம் டொலர் பெறுமதிமிக்க இலத்திரனியல் வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். இதற்கான சூரிய கலத்தை அவர்களே இறக்குமதி அல்லது கொள்வனவு செய்து கொள்ள வேண்டும். இது தொடர்பான சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படும். – என்றார்.

# காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துக்கு இரு சட்டத்தரணிகள் ஆணையாளர்களாக நியமனம்

கொழும்பு, ஒக. 04

காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களாக மாதவ் ஜெயவர்த்தன மற்றும் சம்பத் பெரேரா ஆகியோரின் பெயர்கள் நாடாளுமன்றக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்தால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களாக செயற்பட்டு வந்த வைத்தியர்.விஜயமானே தனது ஆணையாளர் பதவியைத் துறந்திருந்தார். மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சிராஸ் நூர்தீன் அண்மையில் தமது ஆணையாளர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மேற்படி இருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் சட்டத்தின் பிரகாரம் ஏழு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் அண்மையில் தனது பதவியினை இராஜினாமா செய்தபோது இவ்வலுவலகத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் அமைச்சரவைத் தலையீடு போன்றன அலுவலகச் சுயாதீனத்துவத்தினைப் பாதிப்பதாக சுட்டிக்காட்டி தனது இராஜினாமா கடிதத்தை கையளித்திருந்தார் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த அலுவலகத்தின் ஆணையாளராக கடமையாற்றுகின்ற தகனேகல இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடந்த வாரம் நியமனம் பெற்றிருக்கின்றமையும் இங்கு அவதானிக்கத் தக்கது.

இந்நிலையில் புதிதாக நியமனம் பெற்ற சட்டத்தரணிகள் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் சட்டத்தரணி மகேஸ் கட்டுலந்த, ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்பா தாஸிம் யோகராஜா, ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்னே கனேகல ஆகியோருடன் இணைந்து பணியாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணிலுடன் பேச்சுக்குத் தயாராம்!

## சுயாதீன 10 அரசியல் கட்சிகளும் தீர்மானம்

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தத் தயார் என நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமது கோரிக்கைக்கு ஜனாதிபதி அளிக்கும் பதிலின் அடிப்படையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான தீர்மானம் எடுப்போம் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் 10 கட்சிகளுக்கு இடையில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கூட்டத்தின் போது இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

நாளை (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ள சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் தமது யோசனைகளை முன்வைக்கவுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் இறைமையையும் தேசிய வளங்களையும் பாதுகாத்து ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதே தமது பிரதான கோரிக்கை எனக் கூறினார்.

வேலைத்திட்டம் இன்றி அனைத்துக் கட்சி அரசாங்கத்தால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நடமாடும் கொவிட் தடுப்பூசி ஏற்றல்

## மட்டு.சுகாதார வைத்திய அதிகாரி தகவல்

அரச கரியாலயங்களில் கடமையாற்றுபவர்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) நடமாடும் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பணிப்பாளர் வைத்தியர் ஈ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பணிப்பாளர் ஊடகங்களுக்கு இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பில் நான்காவது கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு பூராகவும் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்தில் 67 வயதுடைய ஒருவருக்கு கொவிட் தொற்று கண்டறியப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் 4 ஆவது கொவிட் தடுப்பூசி கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பிக்கப்பட்டது.

நாளை (வெள்ளிக்கிழமை) கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடமாடும் சேவை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலயம், மாவட்ட செயலகம்,மாநகரசபை மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் காரியாலயங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் மூன்றாவது தடுப்பூசி ஏற்றாதவர்கள் மற்றும் முதலாவது தடுப்பூசி ஏற்றுபவர்கள், நோயாளர்கள் போன்றோருக்கு இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது. அதேவேளை பொதுமக்கள் பொது இடங்களில் முகக்கவசங்களை அணியுமாறும், தடுப்பூசி ஏற்றாதவர்கள் தடுப்பூசியை சுகாதார பிரதேச காரியாலயத்தில் சென்று ஏற்றிக் கொள்ள முடியும் – என அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் காப்பகத்திலிருந்த சிறுமியொருவர் மாயம்!

## வெள்ளவத்தையில் சம்பவம்

*வெள்ளவத்தை - டபிள்யு.ஏ.டி. சில்வா மாவத்தையிலுள்ள சிறுவர் காப்பகத்திலிருந்த சிறுமியொருவர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*இது தொடர்பாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*குறித்த சிறுமி செவ்வாய்க்கிழமை அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளமையுடன், 3 நாள்களுக்கு முன்னரே ரன்முத்துகல சிறுவர் காப்பகத்திலிருந்து வெள்ளவத்தை சிறுவர் காப்பகத்துக்கு அழைத்து வரப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*15 வயதான குறித்த சிறுமி, தியகடுவ, மஹகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்துள்ள வெள்ளவத்தை பொலிஸார் சிறுமியைத் தேடும் பணியை முன்னெடுத்துள்ளனர்.*

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-82

### இந்தியாவின் உளவுத்துறையுடனான உறவுகள்

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) 1977 ஆம் ஆண்டுக் கலவரத்துக்கு பின் உருவாகியமையை அடுத்து



சந்திரகாசன்

இந்தியத் தூதரகத்துடன் அடிக்கடி தொடர்புகள் ஏற்படுத்த வேண்டி இருந்தது. இந்திய வம்சாவளியினர் பலர் கழகத்தின் மேற்பார்வையில் அகதிகளாக முகாம்களில் இருந்தார்கள். அதைவிட தமிழ் மக்களது நிலைமை பற்றியும் தூதரக அதிகாரிகளுக்கு அறிவுத்தல்களும் சில உதவிகளுக்கான கோரிக்கைகளுக்காகவும் கழகத்தின் பொறுப்பில் இருந்தவர்களும், அவர்களுடன் இயங்கிய தொண்டர்களும் – அனேகமாக மண்டூர் மகேந்திரன், ஊர்மிளா, உமாமகேஸ்வரன் போன்றோர் – தூதரகத்துக்கு சென்று வந்தனர். இவற்றால் அங்கு பணியாற்றிய அதிகாரிகளினதும் உத்தியோகத்தர்களதும் நட்பையும் வாஞ்சையையும் பொதுவாக தமிழ் அகத்திகள் புனர்வாழ்வு கழகம் பெற்றிருந்தது.

அதற்குத் தரப்பட்ட மதிப்புகளுக்குக் காரணம் தூதரகத்திற்கு உடனுக்குடன் வழங்கப்பட்ட ஆதாரப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்கள், சட்டவிரோதமான கொலைகள், ஆக்கிரமிப்புகள் பற்றிய தகவல்கள் மற்றும் அகதி முகாம்களில் இந்திய வம்சாவளியினரைப் பாதுகாத்து, அவர்களை மீளக் குடியேற்ற உதவி செய்யும் தொண்டர்கள் எதிர்கொண்ட ஆபத்துகளும் அவற்றுக்குத் தாக்குப்பிடிக்க அவர்கள் பட்ட கஷ்டங்களும்தான். அப்படிப்பட்ட தொண்டர்களின் பாதுகாப்புக் கருதி அவர்கள் உடனடியாக இந்தியா புறப்பட வேண்டி இருந்தால், சிவப்பு நாடாக் கட்டுப்பாடுகளை வெட்டி, அவர்களுக்கு விரைந்து விசா பெறக்கூடியதாக இருந்தது. தூத்துக்குடி பாய்மரக் கப்பல்களில் பயணிக்க வேண்டி வந்தால் இந்திய இறங்குதுறைமுகத்தில் நெருக்கடிகளோ எல்லா ஆவணங்களுமோ இன்றி வெளியேற முடிந்தது.

அப்படியான காலங்களில் இருந்து சில இளைஞர்களுடன் இந்திய உளவுத்துறைக்குப் பரிச்சயம் ஏற்பட்டு, சிலர் அவர்களுக்கு அரசியல் ரீதியில் ஒற்றர்களாகவும் இயங்கினார்கள். அந்தத் தகவல்களின் அடிப்படையில் இளம் தலைமுறையில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனோடும் மற்றும் கூட்டணியின் முக்கிய உறுப்பினரான சந்திரகாசனுடனும் அரசியல் துறைகளில் நடைபெற்றவற்றை உளவுத்துறையினர் பகிர்ந்து கொண்டார்கள்.

1983 கலவரத்தின் பின்னரே தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி தந்து, அவர்களை கட்டமைப்பாக உருவாக்கி, ஜே.ஆரின் அரசுக்கு தலையீடு தந்து, அவரை வழிக்குக் கொண்டு வருவது என்ற திட்டம் இந்திரா காந்தியின் அரசால் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் தமிழக அரசின் விருந்தாளிகளாக இந்தியாவில் பாதுகாப்பும் தஞ்சமும் பெற்றிருந்தார்கள்.

அந்தக் கலவரக் காலங்களுக்கு முன் விடுதலைக் குழுக்கள், புளொட்டைத் தவிர்த்து, விடுதலைப் புலிகளின் முன்னெடுப்பில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அமிர்தலிங்கத்தின் தலைமைக்கும் சவாலாக மாறி இருந்தன.

அது மட்டும் அல்லாமல் கட்சியின் உள்ளேயும் சந்திரகாசன், கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றவர்களால் தமிழீழப் பிரகடனம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அழுத்தங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கோவை மகேசன், சந்திரகாசன், ஈழவேந்தன் போன்றோரும் இந்தியாவில் பாதுகாப்பு தேடி தமிழ்நாட்டில் வசித்து வந்தமையால் சந்திரகாசன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் தனக்கு இருந்த அனுபவத்தை முன்னோடியாக வைத்து தமிழ்நாட்டிலும் சில கட்டமைப்புக்களை ஏற்படுத்தி, அவர்களுடன் பணியாற்றிக் கொண்டிருந்தார். அகதிகளாக வந்த பல இளைஞர்கள் அவற்றில் தொண்டர்களாக இருந்தனர். சிறு சர்வதேச நிதி உதவிகளும், புலம்பெயர் மக்கள் அளித்த நிதிகளும் அந்தப் பணிகளுக்கு உதவின. இவற்றால் இளைஞர்களும் அகதிகளும் வாழ்வாதார தேவைகளுக்கு சந்திரகாசனை அண்டித்தான் இருந்தார்கள். இதனால் பொதுவாக புலம்பெயர் சமூகத்திலும் கூட, சந்திரகாசன் தந்தை செல்வாவின் புதல்வன் என்பதால் வளரும் தலைவராகப் பார்க்கப்பட்டார்.

அங்கு வசித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் இன்று உள்ள மாதிரியே அரசியல் தீர்வு வர வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார்களே ஒழிய, அகதிகளாக தமிழ்நாட்டிலிருந்த மக்களினதோ அல்லது நாட்டில் உள்ளவர்களின் வாழ்வாதாரங்களுக்கோ எதுவிதத் திட்டங்களோ வழிமுறைகளோ கடைப்பிடிக்கவில்லை.



பேபி சுப்பிரமணியம்

நாட்டிலானால் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தை பாருங்கள் என்று கையைக் காட்டி விடுவார்கள். தமிழ்நாட்டில் என்றால் சந்திரகாசனின் கட்டமைப்பைக் காட்டி விடுவார்கள்.

இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் அளிப்பது என்ற திட்டம் கருக்கட்டிய போது இந்திய உளவுத்துறை அதற்குப் பொருத்தமானவராக சந்திரகாசனைத் தான் தேர்ந்தெடுத்தது. இயக்கங்கள் இடையே இளைஞர்களை உற்சாகப் ப டுத்தி, இணையச் சொல்லிக் கேட்டார்கள். ஆகவே சந்திரகாசன் தம்மோடு இணைந்து முகாம்களில் பணி புரிந்து கொண்டிருந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்களிலிருந்து தெரியப்பட்டவர்களை இந்திய உளவுத்துறையின் பயிற்சிக்காகக் கையளித்தார்.

அந்த நாள்களில் சக்சேனா உளவுத்துறையின் பொறுப்பதிகாரியாக புதுடெல்லியில் இருந்தார். தென் மாநிலங்களுக்கு – முக்கியமாக தமிழ்நாட்டுக்கு – உன்னிகிருஷ்ணன் என்பவர் பொறுப்பாக இருந்தார். விடுதலை புலிகளின் உறவுகளால் அவர்கள் உன்னிகிருஷ்ணனோடு முன்னைய தொடர்புகளின் காரணமாக ஆர்வம் காட்டவில்லை. புலிகளின் அங்கத்தினருக்கு பொறுப்பாக பேபி சுப்பிரமணியம் இருந்தார்.

அதேசமயம் உமா மகேஸ்வரனோடு பாண்டிச்சேரியில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பிணையில் விடப்பட்டிருந்த பிரபாகரன் பிணையை முறித்து நாட்டிற்குத் திரும்பி இருந்தமையால், மீளவும் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு ஆதங்கங்கள் கொண்டிருந்தார். நேரடியாக விடயங்களைக் கணக்கெடுக்க முடியவில்லை.

இந்தியாவின் ஆயுதப் பயிற்சிக்கு நாட்டிலும் இளைஞர்களைக் கேட்கிறார்கள் என்ற செய்திகளால் இந்தியாவின் முனைப்பால் களநிலைகள் மாறுகின்றன என்ற கணிப்பில் அவர்களது மதியுரைஞர் பாலசிங்கத்திற்கு லண்டனுக்கு செய்தி அனுப்பி, சென்னைக்குச் சென்று, நிலைவரங்களை அறிந்து, ஆவன செய்யுமாறு கேட்டார் பிரபாகரன்.

பாலசிங்கத்துக்கு உளவுத்துறைகளோடு அன்றில் புதுடெல்லியில் நேரடித் தொடர்புகள் இல்லாத நேரங்கள் அவை. ஆனாலும் பிரபாகரன் தந்த செய்தியால் தனது மனைவி அடேலுடன் சென்னை சென்று கள நிலைமைகளை ஆராய்ந்து, அளந்து காரியங்களில் இறங்கினார் அவர்.



பாலாவும் அடேலும்

(வளரும்)

# தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ரணிலின் கொள்கை விளக்க உரை

இலங்கையில் பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொரரை நேற்று ஆரம்பித்து வைத்து கொள்கை விளக்க உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரின் உரையின் முழு விவரம் வருமாறு:–



நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட நபர் என்ற வகையில் நான் கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இன்றைய தினத்திலே ஜனாதிபதியாக நான் முதல் முறையாக உரையாற்றுகின்றேன்.

இச்சபையை இலங்கையின் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் ஏனைய இனத்தவர்கள் ஆகிய யாராக இருந்தாலும் நீங்கள் இந்த இடத்திலே இலங்கை நாடாளுமன்றம் என்ற ரீதியிலேயே ஒன்றுகூடுகின்றீர்கள்.

எமது நாட்டிலே வாழுகின்ற மக்களும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவ்வாறு எந்த இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றோம்.

நான் இன்று உங்கள் முன் அனைத்து இலங்கையர்களினதும் ஜனாதிபதியாகவே உரையாற்றுகின்றேன்.

எமதுநாடுபல்வேறுகலாசாரங்களைக் கொண்டுள்ள, பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்டுள்ளது. கலாசார விழுமியங்களைப் பேணி வருவதற்கும், சமயங்களைப் பின்பற்றுவதற்கும் மற்றும் தமது தாய்மொழியைப் பயன்படுத்துவதற்கும் அனைவருக்குமுள்ள உரிமையை உங்கள் ஜனாதிபதி என்ற வகையில் நான் பாதுகாப்பேன்.

அவ்வாறே அரசமைப்பின் பிரகாரம் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமையளித்து, பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும், அனைத்து சமயங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

எமக்கு சமய, கலாசார, சமூக ரீதியான மாத்திரமன்றி, பொருளாதார ரீதியாகவும் சிறந்ததொரு பாரம்பரியம் உரித்தாக உள்ளது. அது பல்வேறு கலாசாரங்களினால் வளர்ந்துள்ளது. நான்கு வரம் கடவுள்கள் பற்றிய எண்ணக்கருவானது அவ்வாறே பௌத்த சமயத்துடன் தொடர்புபடுகின்றது. இவ்வாறான பாரம்பரிய மரபுரிமைகளை அடிப்படையாகக் கொண்டுஎதிர்காலத்தைக்கட்டியெழுப்பும் பொறுப்புஇன்றுஎம்மிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒரு புறம். பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும், நாட்டுக்காக இந்தக் கடினமான சவாலைப் பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டுக்கொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டுக்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும்.

நாம் இன்று நவீன வரலாற்றிலே ஒரு போதும் எமது நாடு முகம்கொடுத்திராத கடுமையான பிரச்சினையொன்றுக்கு முகம்கொடுத்துள்ளோம். நாம் பாரிய அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ளோம். அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணையும் சவாலை வெற்றிகொண்டால் மாத்திரமே முடியும். இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் கௌரவ உறுப்பினர்களும் அவ்வாறே நாட்டு மக்கள் அனைவரும் நாட்டினைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு தத்தமது சக்திக்கு உட்பட்டவாறு பங்களிப்புச் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே இச்சந்தர்ப்பத்தில் பெரும்பாலான நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். ஒன்றிணையும் பட்சத்தில் எம்மால் நாட்டினைக் கட்டியெழுப்ப முடியும். பிரிந்து சென்றால் இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமன்றி முழு நாட்டு மக்களும் துன்பத்துக்கும் அழிவுக்கும் ஆளாகுவர்.

எனவே, சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு நான் மீண்டும் இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் உங்கள் அனைவருக்கும் நட்பின் கரத்தை கௌரவத்துடன் நீட்ட விரும்புகின்றேன். கடந்த காலத்தினை பின்தள்ளிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு நம்பிக்கையுடன் அழைப்பு விடுக்கின்றேன். சர்வகட்சி அரசு பற்றி அரசியல் கட்சிகளுடன் நடத்தும் பேச்சை நான் ஏற்கனவே ஆரம்பித்துள்ளேன்.

எனது வேலைத்திட்டத்தை ஆராய்ந்து, அதன் பின்னர் சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பதற்கு இணக்கப்பாட்டைத் தெரிவிப்பதாகச் சில தரப்பினர் தெரிவித்திருந்தனர். அது பற்றியும் இங்கு கருத்துக்கூற விரும்புகின்றேன். சர்வகட்சி அரசு என்பது ஒரு கட்சியின் தனி விருப்பத்துக்கேற்ப செயற்படுகின்ற அரசு அல்ல. அது பொது கொள்கை வட்டத்தினுள் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களின் பிரகாரம் பயணிக்கும் அரசு ஆகும். நம் அனைவரினதும் கருத்துக்களின் பிரகாரம் செயற்படும் அரசு ஆகும். நாட்டுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்லுகின்ற ஒரு அரசு ஆகும்.

விரைவில் இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு ஸ்திரத்தன்மை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்காக சர்வகட்சி அரசு ஒன்றின் முக்கியத்துவம் பற்றி நான் இச்சபைக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

பொருளாதாரம் சரிந்து விழுந்ததினால் எமது நாடு பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. இவ்வாறு எமது பொருளாதாரம் ஏன் சரிந்து விழுந்தது.

எமது பொருளாதார முறைமைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி நாம் இன்று மூன்று நான்கு தசாப்தங்களாக விவாதித்து வருகின்றோம். 1977 ஆம் ஆண்டு எமது நாட்டுக்குப் புதிய பொருளாதார முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், காலத்திற்கு பொருந்தக் கூடியவாறு அதனை எம்மால் நவீனமயப்படுத்த முடியவில்லை. பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு கவனம் செலுத்தாது போட்டித்தன்மை, தூரநோக்கற்ற அழிவுமிக்க குறுகிய அரசியலில் நாம் ஈடுபட்டோம். உக்ரேன் போர் மற்றும் கொரோனாத் தொற்று என்பன காரணமாக உலகின் பிரதான பொருளாதாரங்கள் சரிந்து விழுதல் உள்ளிட்ட சர்வதேசத்தில் இடம்பெற்ற அனுகூலமான பொருளாதாரக் காரணிகள் எமது நெருக்கடியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

இந்த அனைத்து காரணிகளினாலும் எமது நாடு மிகவும் பாதாளத்திற்குத் தள்ளப்பட்டது. மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகினர். தற்போது நாம் விழுந்த இடத்திலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளோம்.



தற்போதுள்ள மின்வெட்டைக் குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது. பயிர்செய்கைக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் உரத்தைக் கொண்டுவருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயு பிரச்சினை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில் உள்ளது. வரிசையில் காத்திருக்காது சமையல் எரிவாயுவை இன்னும் சில தினங்களில் அனைவராலும் பெற்றுக்கொள்ள முடியும். உணவுத் தட்டுபாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித் துறை என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மீளெழும் முயற்சியிலே எமது அயல் நாடான இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு எமக்கு வழங்கிய உயிர் மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக பிரதமர் மோடிக்கும், இந்திய அரசுக்கும், இந்தியமக்களுக்கும்நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தற்போது எமது முன்னால் உள்ள குறுங்கால பிரச்சினை அமைவது எரிபொருள் தட்டுப்பாடாகும். எரிபொருளைக் கொண்டு வருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையிலே நாம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும். எனவே, எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று ஊடாக எரிபொருளைக் கொண்டு வருவதற்கான முறைமை ஒன்றை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். இதன்போது எரிபொருளுக்கான கொடுப்பனவைச் சமப்படுத்திக்கொள்வதற்காக தேர்ந்தெடு இறக்குமதிகளை வரையறுத்துக்கொள்ள வேண்டியும் எமக்கு ஏற்படும். மறுபுறமாக எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டியும் ஏற்படும். எனவே, இந்த ஆண்டின் இறுதி வரையில் இந்தகி கஷ்டத்தை நாட்டுக்காக நாம் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் அனைவரும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றோம்; துன்பப்படுகின்றோம்; கஷ்டப்படுகின்றோம்; சிக்கல்களுக்கு ஆளாகின்றோம். இவ்வாறான கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கான பாதையை நோக்கி இந்நாட்டைக் கொண்டுசெல்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் நான் நடவடிக்கை எடுப்பேன்.

இந்தக் கஷ்டங்களிலிருந்து மீழுவதற்குநாம் நீண்ட கால தீர்வுகளை நோக்கிப் பயணித்தல் வேண்டும். மீண்டும் ஒருபோதும் இவ்வாறான பொருளாதார நெருக்கடி ஒன்று எமது நாட்டிலே ஏற்படாதவாறு பலமிக்க அடித்தாளமொன்றை இடுதல் வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பக்கம் மாற்றியமைத்தல் வேண்டும். அவற்றுக்குத் தேவையான அறிக்கைகள், திட்டமிடல், சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றைத் தற்போது நாம் தயாரித்து வருகின்றோம்.

நான் இன்று உங்கள் முன்னிலையில் தெளிவுபடுத்துவது எங்கள் எதிர்காலத்துக்கு அடிப்படையாகும் திட்டமிடல் சட்டகமாகும். இச்சட்டகத்தினுள் நாம் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்கள் என்பவை தொடர்பான விபரமான தகவல்கள் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால வரவு – செலவு மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்படும்.

மீளெழுச்சிபெறும் ஆரம்பக் கட்டமொன்றாக நாம் சர்வதேச நிதியத்தோடு நான்கு வருட வேலைத் திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம். ஆகஸ்ட் மாதத்திலிருந்து நாம் அந்த கலந்துரையாடல்களை மீணடும் முன்னெடுத்துச் செல்வோம். ஆரம்பகட்ட உயர்மட்டத்திலான கலந்துரையாடல்களைச் துரிதமாகவும் சிறப்பான முறையிலும் முடிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

சர்வதேச நிதியம் மற்றும் சட்ட நிபுணர்களான லசாட் மற்றும் கிளிபட் சான்ஸ் நிறுவனங்களோடு சேர்ந்து கடன் நிலைப்படுத்தும் திட்டம் தற்போது முடியுறும் தறுவாய்க்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தை இன்னும் சில தினங்களில் நாம் சர்வதேச நிதியத்திடம் முன்வைப்போம். அதன் பின்பு எமக்கு கடன் உதவிகள் வழங்கியுள்ள நாடுகளோடு கலந்துரையாடுவோம். அதன்பின்பு தனியார் கடனாளிகளோடும் கலந்துரையாடல்களை

☞ 11

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் மக்களுக்கு...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிப்போம். அவர்களோடு உடன் பாட்டுக்கு வருவோம்.

இறுதியாக ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்போம். எமது கடந்த கால பொருளாதார உரிமை வெளிநாட்டு வர்த்தகமாகும். கடந்த காலத்தில் இலங்கையைக் கடல் பட்டுப்பாதையில் அமைந்த பிரதான பொருளாதாரக் கேந்திர நிலையமொன்றாக இனங்கண்டிருந்தார்கள். இலங்கை ஒரு காலத்தில் கீழைத்தேய தானிய களஞ்சியமொன்றாக அறிமுகமானது அதனால்தான். முழு வலயத்திலும் இருந்த அரிசியை உலகம் பூராகவும் பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையமாக இலங்கை இருந்தது.

அந்தக் கடந்தகால உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதன்மூலம் வலுவான மற்றும் அபிவிருத்தியான பசுமை பொருளாதாரமொன்றை உருவாக்குவதே எமது இறுதி இலக்காக இருந்தது. காலநிலை மாற்றங்கள் எதிர்கால உலகம் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினையொன்று என்பதை இனங்கண்டுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவான பொருளாதாரமொன்றை நாம் உருவாக்குதல் வேண்டும். மகா பராக்கிரமபாகு அரசர் கூறியதுபோல வானத்திலிருந்து விழும் ஒரு துளி நீரைக்கூட வீணாகப்போகாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் பிரதிபலனாக இருப்போர் இல்லாதோர் இடைவெளி விரிவடைந்துகொண்டு செல்கின்றது. நடுத்தர வகுப்பினர் சுருங்கிச் செல்கின்றார்கள். இன்னுமொரு பக்கத்தில் தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்கின்றது. தொழில்கள் இல்லாது போகின்றது.

கடந்த காலத்தில் வெளிநாட்டு ஊழியர்கள் இலங்கைக்கு அனுப்பும் நிதியின் அளவு குறைந்துவிட்டது. அதற்குப் பல காரணங்கள் உள்ளது. கொரோனாத் தொற்றுப்பரவல் காரணமாகப் பல தொழில்கள் இல்லாது போனது. தொழில்களுக்காக வெளிநாடு செல்வோர் குறைந்துள்ளனர். ரூபாயின் பெறுமதியைச் செயற்கையாகக் கட்டுப்படுத்தியதன் காரணமாக வேறு முறைகளின் மூலம் இலங்கைக்கு பணம் அனுப்புதல் மிகவும் இலாபகரமானதாக இருந்தது. தற்போது படிப்படியாக இந்நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. வங்கி முறைமையினூடாக இலங்கைக்குப் பணம் அனுப்புதலை ஊக்குவிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவது ஆகஸ்ட் மாதத்திலிருந்தாகும். இச்சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் வருவித்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றோம். அரச உரிமைப் பத்திரதாரிகளுக்கு அறுதி உறுதிப் பத்திரம் வழங்குவோம். அரச மாடிவீடுகளில் வசிப்போருக்கு வீட்டு உரிமைகளை வழங்குவோம். தோட்டத்துறையில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

பொருளாதாரத்தை நிலைபேறுடையதாக்கும் முயற்சியின்போது சமூகத்தின் வலுவற்ற மற்றும் நிர்க்கதியானோர் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துவோம். நாட்டின் தொழில்முயற்சியாளர்களுக்கு தங்களது ஆற்றல்களினூடாக முன்வருவதற்குத் தேவையான வழிகளை மேலும் விரிவுபடுத்துவதோடு சமூகத்தில் கீழ்மட்டத்தில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். நாடுபூராகவும் வசிக்கும் ஏழை மக்களுக்கு குறுகியகால நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீண்டகால வேலைத்திட்டங்களை



நடைமுறைப்படுத்துவோம். நான் சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவேன்.

நான் எதிர்காலத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நேர்மறையான சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்பேன். மீண்டும் விரிவான நடுத்தர வர்க்கத்தினரை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவேன். சமூக சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் ஊடாக நன்மைகள் முழு சமூகத்திற்கும் நியாயமானவாறு பெற்றுக்கொடுப்பேன்.

இக்குறிக்கோள்களை ஈடேற்றும் செயற்பாடுகளுக்காகச் சமூக நியாயாதிக்க ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

இற்றைக்கு நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் அரச தொழில்முயற்சிகள் தொடர்பில் பொருளாதார எண்ணக்கருவொன்று இருந்தது. ஆனாலும், அது தோல்வியான மற்றும் வினைத்திறனற்றதென்பதை தற்போது முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. சோசலிச நாடுகளான சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளும் தற்போது அரச தொழில்முயற்சிகளை செயற்படுத்துவதில்லை. நாம் மேலும் பண்டைய எண்ணக்கருக்களில் தங்கி நின்றால் எமது நாடு மேலும் கீழ்நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்கு யாருக்கும் முடியாமல் போகும். ஆகையினால் இவ்வாறு நட்டமடையும் அரச முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது எவ்வாறு என்பது பற்றி எமக்கு கொள்கைரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டிவரும்.

இற்றைவரை உலகத்தில் பொருளாதார வல்லமைகொண்ட நாடுகளாக மேற்குலக நாடுகளே இருந்தன. ஆனாலும், 21 ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னதாக உலகத்தில் வலுவான பொருளாதாரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு உரித்தாகும். அவ்வாறான பின்புலத்தில் எமது நாட்டின் புவிசார் அமைவு மிகவும் முக்கியமானதாகும். நாம் இந்த இலாபகரமான அமைவின் உச்சப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும். இதனை மனதில் நிறுத்திக்கொண்டு எமது எதிர்கால நிறுவன சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல் வேண்டும். தினந்தோறும் கடன் பெற்றுக்கொள்வதன்மூலம் நாட்டை முன்கொண்டுச் செல்ல எம்மால் முடியாது. கடன் எடுப்பதை இயன்ற அளவு குறைத்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆகையினால் இந்து சமுத்திர கேந்திரீய புதிய பொருளாதார வலுவினால் எமது நாட்டுக்கு உச்சபட்ச பயனை பெற்றுக்கொள்ளக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளை நான் உங்களோடு சேர்ந்து வகுப்பேன்.

இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பாடுபடும்போது சம்பிரதாய சிந்தனையிலிருந்து விடுபடுமாறு நான் சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். வெறுமனே அதிக வட்டிக்கு வர்த்தகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும்போது அமைதியாகப் பார்த்திருந்த சில குழுக்கள் நாட்டுக்கு பொருத்தமான முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பொய்யான பலிக்கடாக்களை உருவாக்கி மக்களை திசைதிருப்புகின்றார்கள்.

யாரேனும் சொல்வதை ஆராய்ந்து பார்க்காமல் ஏற்றுக்கொண்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாது. ஊழல் மற்றும் மோசடி ஊடாக நாட்டின் நிதி மற்றும் வளங்களைக் களவாடியதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகள்பற்றி மக்கள் அறிவார்கள். ஆனாலும் பொய் பலிக்கடாக்களை எடுத்துக்காட்டி வெளிநாட்டு முதலீடுகளைத் தடைசெய்து நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணக்கிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும்.

நான் உதாரணங்கள் பலவற்றை எடுத்துக் காட்டுகின்றேன்.

இந்தியாவோடு ஒன்றிணைந்து திருகோணமலை எண்ணெய்த்தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்போது இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் என்று கூறி அபிவிருத்தித் திட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர். அன்று எமக்கு எண்ணெய்த்தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இன்று மக்களுக்கு எரிபொருள் வரிசைகளில் நீண்ட நாட்கள் அலைவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

சுவசெரிய நோய் காவு வண்டிகளின் சேவையை ஆரம்பிக்கும்போது அதே போன்று எதிர்ப்புகளைச் செய்தார்கள். சுவசெரிய நோய் காவு வண்டிகள் வைத்தியசாலைகளுக்கு வந்தால் ஏற்படுவது மரணம் எனக் கூறி சில வைத்தியர்கள் ஊடகக் கலந்துரையாடல்கள் நடத்தினார்கள். ஆனாலும், நாம் எவ்வாறாயினும் சுவசெரியவை ஆரம்பித்ததனால் தற்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை வழிதவறி நடத்தி தடைசெய்த கருத்திட்டங்கள் காரணமாக எமது பொருளாதாரக் கட்டமைப்பு அழிவடைந்தது.

இலகு ரயில் சேவையைத் தாபிப்பதற்கும், துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் நாடு முன்வந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக அடிப்படையற்ற வீணான காரணிகள் பலவற்றை எடுத்துக்காட்டியதன் காரணமாக எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கிருந்த 3 பில்லியன் டொலருக்கு அதிகமான அளவு கிடைக்காமல் போயிற்று. அதுமட்டுமன்றி ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையே இருந்த நீண்டகால நட்பு சிதறிப்போனது.

இக்கருத்திட்டங்களை எமக்குப் பெற்றுத்தருவதற்கு தலைமை தாங்கியவர் இலங்கையின் உற்ற நண்பனான முன்னாள் ஜப்பான் பிரதமர் அபே ஆவார். அவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார். எமது சமய நம்பிக்கைப்படி நான் அபேபின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க விரும்புகின்றேன்.

அபிவிருத்தி பொருளாதாரம் ஒன்றினை நோக்கி நாம் பயணிக்கும் பாதையினை மிகவும் பலப்படுத்திக் கொள்வதற்காக நாம் கடந்த காலத்தை பற்றி திரும்பிப் பார்த்தல் வேண்டும். எமது பொருளாதாரம் இந்த அளவு வீழ்ச்சி அடைவதற்கு காரணம் என்ன? எதிர்மறையான பிரதிபலன்கள் எம்மை ஏன் வந்தடைந்தன? தனி நபர்கள் செய்த தவறுகள் மூலமா? அல்லது கொள்கை ரீதியான குறைபாடுகள் காரணமாகவா? ஒவ்வொரு நபரும் நாம் விரும்பியவாறு பொருளாதாரத்தை வழிநடத்த எவ்வாறு வாய்ப்பு ஏற்பட்டது? நபருக்கு நபர் நாட்டின் பொருளாதாரக் கொள்கை மாற்றம் அடையலாமா? காலத்திற்கு காலம் அவ்வாறு கொள்கைகளை மாற்றுவது நாட்டுக்கு பயன்மிக்கதா? அல்லது பயனற்றதா?

இது பற்றி நாம் ஆழமாக தேடிப் பார்த்தோம். அதற்கு தீர்வாக எதிர்வரும் 25 வருடங்களுக்கு நாங்கள் தேசிய பொருளாதார கொள்கை ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம். வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குழுக்களை கவனித்து தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து உருவாக்குகின்ற சமூக சந்தைப் பொருளாதார முறைமைக்குத் தேவையான அடித்தாளத்தை இடுவேன்.

2025 ஆம் ஆண்டளவில் ஆரம்ப நிலை வரவு – செலவுத் திட்டத்தில் மிகை ஒன்றை ஏற்படுத்துவது எமது முயற்சியாகும். பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நிலையான தன்மைக்கு உயர்த்துவதும் நமது முயற்சியாகும். 2026 ஆம் ஆண்டாகும்போது நிலையான பொருளாதார அடிப்படை ஒன்றினை உருவாக்கிக் கொள்வது எமது எதிர்பார்ப்பாகும் தற்போது அரச கடன் அளவானது மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 140 சதவீதம் ஆகும். இதனை 2032 ஆம் ஆண்டளவில் மொத்தத் தேசிய உற்பத்தியில் நூறு சதவீதத்தை விடவும் குறைப்பது எமது திட்டமாகும்.

அவ்வாறு தேசிய பொருளாதாரக் கொள்கையின் ஊடாக நாட்டினையும், நாட்டு மக்களையும் கட்டியெழுப்பும் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றால், 2048 ஆம் ஆண்டிலே சுதந்திர தின நூற்றாண்டைக் கொண்டாடும்போது முழுமையான அபிவிருத்தி அடைந்த ஒரு நாடக எம்மால் மாற முடியும்.

நான் இவ்வாறான நீண்டகால இலக்குகளுக்குத் திட்டங்களைத் தயாரிக்கும்போது சிலர் பரிகாசமாகப் பார்க்கின்றார்கள். கேலிக்கதைகள் சொல்கின்றனர். ஆம். நான் ஏனைய அரசியல்வாதிகள் போன்றவர் அல்லர். என்னிடம் இருப்பது நீண்டகாலத் திட்டங்கள். நான் திட்டமிடுவது எனது முன்னேற்றத்துக்காக அல்ல. இளைஞர் சமுதாயத்துக்காகவே. நாளைய நாளுக்காகவே. நான் இன்று நாட்டும் மரத்தின் அறுவடையை எனக்கு அனுபவிக்க கிடைக்காது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனாலும் நாளைய தினம் எமது பிள்ளைகளான எதிர்காலப் பரம்பரைகள் அந்த அறுவடையை அனுபவிப்பார்கள்.

எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பிலும் விசேடமாகக் குறிப்பிட நான் விரும்புகின்றேன். வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியற்ற தன்மை காரணமாக எமக்கு சர்வதேச மட்டத்தில் அதிகளவிலான

12

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களுக்கு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இழப்பீடுகள் மற் றும் பின்னடைவுகள் ஏற்பட்டன. நான் இந்த நிலைமையை மாற்றுவேன். உல கத்தில் சகல நாடுகளும் எனது நண்பர் கள். எமக்கு எதிராளிகள் இல்லை. நாம் எந்தவொரு கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்லர். சகல நாடுகளோடும் நட்புரீதியான கொள்கையைப் பின்பற்றுவதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

சுபீட்சமான இலங்கையொன்றைக் கட்டியெழுப்புவதற்காகப் பொருளாதார மேம்படுத்தலுக்குச் சமாந்திரமாக சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்பகள் பலவற்றைச் செய்யவேண்டுமென நான் இதற்குமுன்பும் வலியுறுத்தியுள்ளேன். எமது நாட்டின் மக்களும் பாரிய அரசியல் மறுசீரமைப்புச் செயற்பாடொன்றை எதிர்பார்க்கின்றனர்.

இன்று ஏற்பட்டுள்ளது என்ன? அரசியல் முறைமை மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பான மக்களது நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. அரசியல் பொறிமுறை தொடர்பான மக்களது எதிர்பார்ப்புகள் உடைந்துபோயுள்ளன.

கடந்தகாலம்பூராகவும் எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் இந்த முறைமைத்தொகுப்பின் மாற்றத்தை கேட்டு நின்றது அதற்காகத்தான்.

இலங்கை நாட்டையும் நாட்டு மக்களையும் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சகல மாற்றங்களையும் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். நாடு கேட்கும் சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகளை நான் நடைமுறைப்படுத்துவேன்.

ஆட்சி முறையில் மாற்றமொன்றை ஏற்படுத்தும் நோக்கில், நாடு பூராக ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் பிற்காலத்தில் காலிமுகத்திடலில் கேந்திரமானது. நாட்டின் பிரதான நகரங்கள் சிலவற்றுக்கும் அது வியாப்தியடைந்தது. இந்தப் போராட்டமானது மிகவும் அஹிம்சையாகவும் ஆக்கபூர்வமாகவும் இடம்பெற்றது. இப்போராட்டக்காரர்கள் எந்தவொரு வன்முறைகளிலும் ஈடுபடவில்லை. அதன் காரணமாகவே குடும்பம் குடும்பமாக வந்து போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். சிறு குழந்தைகளையும் போராட்ட பூமிக்கு அழைத்து வருவதற்கு பெற்றோர்கள் அச்சம் கொண்டிருக்கவில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தின் சுவர்களில் சித்திரம் வரைந்தனர். ஆனால், எந்தவிதமான பாதிப்பும் இல்லாதவாறு டிஜிட்டல் முறையில். ஆனால் அதன்பின்னர் இப்போரட்டத்தில் அஹிம்சாவாதம் கீழ்படிந்து வன்முறை மேலெழுந்தது. ஒரு சில குழுக்கள் போராட்டத்தின் ஒற்றுமையை மிதித்து போராட்டத்தின் உரிமையாளர்களாக மாறினர். அவர்கள் அன்புக்குப் பதிலாக போராட்டத்தில் வன்முறையைத் திணித்தனர்.

நான் ஒருபோதும் வன்முறை மற்றும் பயங்கரவாதத்திற்கு இடமளிக்கமாட்டேன். ஆயினும் அஹிம்சை மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

அமைதியாக போராட்டத்தில் ஈடுபடுவது அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் இந்தப் போராட்டக்காரர்களை வேட்டையாடப் போவதாக பாரிய பிரச்சாரத்தை சில குழுக்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப முயற்சித்து வருகின்றனர். ஆயினும், அது உண்மையல்ல. நான் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எந்தவொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்காக முன்வருவதற்கும் நான் விசேட செயலணியொன்றை ஸ்தாபிப்பேன்.

அமைதியான போராட்டக்காருக்கு அநீதி விளைவித்;தால் அந்தச் செயலணிக்கு நாளில் 24 மணித்தியாலத்தில் எந்த ஒரு நேரத்திலும் முறைப்பாடு செய்யமுடியும். அவ்வாறான அறிவித்தல்கள் குறித்து விசாரித்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழுவொன்றை ஸ்தாபிப்பேன்.

ஆயினும், திட்டமிட்டு சட்டத்தை மீறி, வன்முறை மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை மீறி செயல்பட எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. சட்டம் எனக்கும், உங்களுக்கும், அனைவருக்கும் ஒன்று.

மே 09 ஆம் திகதி அமைதியான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய நபர்கள் மற்றும் போராட்டத்தின் பெயரில் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை பரப்பும் நபர்கள் குறித்தும் அதேபோன்று சட்டத்தை அமுல்படுத்துவேன். இந்தச் செயற்பாட்டின்போது எந்த ஒரு அரசியல் அழுத்தம் இடம்பெறாத வகையில் பொறுப்புக்கூறுவேன்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வன்முறையைத் தூண்டும் குழு உள்ளனர். நாட்கணக்காக வரிசையிலுள்ள மக்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்காது, பலவந்தமாக வரிசைகளை கடந்து முன்வருவோர் குறித்து முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான பாதாள உலக கோஷ்டிகளுக்கு இடமளிக்க முடியாது. இப்போது நாம் எரிபொருள் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நேரம். ஆகவே, எமக்கு விநியோகிக்கக் கூடிய குறைந்தளவான எரிபொருளை நியாயமான முறையில் விநியோகிக்க வேண்டும். வரிசையை அத்துமீறுபவர்களுக்கு எதிராகச் சட்டத்தை வன்மையாக பிரயோகிக்க வேண்டுமென நான் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

ஆகஸ்ட் மாதம் பௌத்த மற்றும் இந்து சமய பிரதான பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஆகஸ்ட் மாதம் அதிகமான சுற்றுலா பயணிகளும் வருகை தருவதற்கான காரணங்களில் வைபவமும் ஒன்று. ஆயினும் நாட்டின் குழப்பமான பின்னணி ஏற்படுத்தி வைபவங்களை சீர்குலைப்பதற்கும் ஒரு சில குழுக்கள் முயற்சித்து வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பிரி



வினர் இது குறித்து அவதானிப்புடன் உள்ளனர். இவ்வாறான சூழ்ச்சிகளில் சிக்கி நாட்டின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாமென நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

அமைதியான முறையில் எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக கொழும்பு மாநகர சபை மற்றும் கண்டி மாநகர சபை என்பவற்றின் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற போராட்டக்காரர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்கும். எனவே, நான் மிகவும் விநயமாக வேண்டிக்கொள்வது அத்துமீறிய இடங்களில் தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டாம் என்பதாகும். எனவே, அவ்வாறான அத்துமீறிய இடங்களிலிருந்து வெளியேறி, சட்டத்தையும் ஒழுங்கினையும் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைதியான போராட்டக்காரர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களது ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு சமாந்தரமாக மட்டக்களப்பிலும் ஒரு போராட்டம் இடம்பெற்றது. நாளாந்தம் காந்தி சிலை வரை ஊர்வலமொன்று ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தப் போராட்டத்துடன் இணைந்த திபெத் நாட்டைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய தாஷி சோதப் தேரர் நிகழ்த்திய உரையை சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

நான் ஊர்வலத்தில் இணைவதால் நீங்கள் உங்கள் பங்களிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளீர்கள். உங்கள் எதிர்ப்பை வேறொரு வகையில் வெளிப்படுத்துகின்றீர்கள். உங்களது பங்கேற்பில் வெளிப்படுவது யாதெனில் நடைமுறையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பான உங்களது கருத்தாகும். தங்களைத் தெரிவு செய்திருப்பது இந்த நெருக்கடி நேரத்தில் விழிப்புடன் இருப்பது. அவ்வாறின்றி தனித்திருந்து அதிருப்தி கொள்வதல்ல. ஒரு போராட்டத்தை மற்றுமொரு போரட்டத்தால் தீர்க்க முடியாதென்பதை நாம் அறிவோம். நெருக்கடியை அமைதியாகவே தீர்க்க வேண்டும்.

தாஷி சோதப் தேரர் குறிப்பிட்டவாறு, நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்த நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென நான் மீண்டும் இச்சபைக்கு வலியுறுத்த விரும்புகின்றேன். நாம் அனைவரும் ஒன்றிணைவோம். 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை மேற்கொள்வோம்.

இங்கு சில காரணிகளின் பக்கம் நான் கவனம் செலுத்த வைப்பதற்கு விரும்புகின்றேன். இந்த நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு நாம் எவ்வாறு முன்னோக்கிச் செல்லல் வேண்டும்? அப்பயணத்தின்போது அரசியல் கட்சிகளின் பொறுப்புக்கள் என்ன? எமது மரபுரீதியான அரசியல் சிந்தனைக்குள் அடைபட்டு இப்பயணத்தைச் செல்ல முடியுமா?

அரசியல் கட்சி முறை பற்றி நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. கட்சிகளின் செயற்பாடானது எதிர்காலத்துக்குப் பொருந்தக்கூடியவாறு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். அரசியல் ஒன்று நாம் இன்று

நினைத்துக்கொண்டிருப்பவை, அரசியல் ஒன்று நாம் இன்று மேற்கொள்பவை அனைத்தையும் அதே விதத்தில் நாம் முன்னெடுத்துச் செல்வதா என சிந்தித்தல் வேண்டும். அரசியல் கல்வி பற்றி ஆழமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1977ஆம் ஆண்டிலே இளைஞர் யுவதிகள் என்ற வகையில் எமது எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாகைள் பலவற்றை அடைந்துகொள்வதற்குரிய புதிய பொருளாதாரம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ள எம்மால் முடிந்தது. தற்போது எதிர்காலத்திற்கு உகந்த புதிய பொருளாதாரம் ஒன்றினை உருவாக்கிக் கொள்வதற்கு எமது இளம் பராயத்தினரின் முழுமையான பங்களிப்பு கிடைக்கப் பெறுதல் வேண்டும். அவர்களது திறமைகள் போராட்ட பூமிக்கு மாத்திரம் வரையறுக்கப்படலாகாது. நாட்டின் எதிர்காலத்திற்கு அவர்களது ஆக்கத்திறன் மிக்க திறமைகளை ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பினை நாம் திறந்து விடுதல் வேண்டும். எதிர்வரும் தேர்தல் ஒன்றின்போது அதிகம் அதிகம் இளைஞர், யுவதிகளே இந்த நாடாளுமன்றத்துக்கு வருகை தருதல் வேண்டும். எதிர்வரும் தேர்தலானது இளைஞர் வர்க்கத்தின் சந்தர்ப்பமாக அமைதல் வேண்டும்.

எனவே, அதற்கு இடம் அளிக்கக் கூடிய வகையில் புதிய மனப்பான்மைகளைக் கொண்ட புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியமை இங்கு பணியென நான் கருதுகின்றேன்.

தற்போது தேர்தல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்திற்கும் உறுப்பினர்களை நியமிக்கும் பூரண உரிமை ஜனாதிபதிக்கே உண்டு. அது ஜனநாயகத்துக்கு உகந்த நிலை ஒன்றல்ல என்பதனை நான் நேரடியாக குறிப்பிட விரும்புகின்றேன். நாம் அந்த நிலையை மாற்றியமைத்தல் வேண்டும். தற்போது ஜனாதிபதியிடம் இலங்கையின் ஆதிகாலத்தில் அரசர் ஒருவரிடம் இருந்த அதிகாரங்களை விடவும் அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனை உடனடியாக மாற்றி அமைத்தல் வேண்டும்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி என்பவர் மக்களுக்கு மேலால் வாழுகின்ற அரசராக அல்லது கடவுளாக இருக்க வேண்டியதில்லை. அவரும் பிரசையில் ஒருவர். எனவே தனியான கொடி, இலச்சினை, தனியான கௌரவங்கள் மூலம் புனிதத் தன்மைக்கு ஆளாக்க வேண்டியதில்லை.

அரசமைப்பு மறுசீரமைப்பு செயற்பாட்டின் ஆரம்பமாக, 19 ஆவது திருத்தத்திலிருந்த அனைத்து நேர்மறையான விடயங்களையும் உள்ளடக்கி 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக இந்த கௌரவ சபையின் முழுமையான ஆதரவை நான் எதிர்பார்க்கின்றேன்.

22 ஆவது அரசமைப்புத் திருத்த வரைவு தற்போது நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது பற்றி கலந்துரையாடி பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவது பொருத்தம் என நான் கருதுகிறேன். எமக்கு தேவையான அனைத்தும் 22 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது போகலாம். அது எமது மறுசீரமைப்புத் தொடரின் முதலாவது அடித்தாளமாகும். இச்சபையிலுள்ள அனைவரும் ஏகமானதாக அதனை நிறைவேற்றிக்கொள்வது மிகவும் சிறந்த முன்னோக்கிய நகர்வாக அமையும்.

நான் இதற்கு முன்னரும் சபையில் குறிப்பிட்டது போன்று நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அந்த குழுக்கள் ஊடாகவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக் கிட்டும். சாதாரண சமூகமொன்றிற்கான தேசிய இயக்கம் இது தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையினை நான் ஏற்கனவே இச்சபையில்சமர்ப்பித்துள்ளேன்.

அவ்வாறே அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றினை நிறுவுவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். முன்னெடுக்கும் நோக்கில் அனைவரினதும் ஆகக் குறைந்தபொதுஇணக்கப்பாடொன்றுடன் கூடிய வேலைத்திட்டம் ஒன்றினை இந்த தேசிய சபையின் ஊடாக தயாரித்துக் கொள்ள எம்மால் முடியும்.

பேதங்கள் மூலம் எமது நாடு முற்காலம் தொட்டு பின்னடைவுகளுக்கு உள்ளானது. நாம் இன ரீதியாக பிரிந்தோம், மொழி ரீதியாக பிரிந்தோம், சமய ரீதியாக பிரிந்தோம். கட்சி ரீதியாக பிரிந்தோம். வகுப்பு ரீதியாக பிரிந்தோம், பூகோள ரீதியாகவும் பிரிந்தோம் குல ரீதியாகவும் பிரிந்தோம்.

சில தரப்பினர்கள் இப்பிரிவினை மேலும் விஸ்தரித்தனர். அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறான பிளவுகளை பயன்படுத்தினர். பிரித்து ஆள்வதன் அனுகூலத்தை அனுபவித்தனர். முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். இவ்வாறு இன ரீதியாவும் சமய ரீதியாகவும் பல்வேறு விதமான பிளவுகளை

13

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் மக்களுக்கு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாது போகலாம். அது எமது மறுசீரமைப்புத் தொடரின் முதலாவது அடித்தாளமாகும். இச் சபையிலுள்ள அனைவரும் ஏகமான தாக அதனை நிறைவேற்றிக்கொள்வது மிகவும் சிறந்த முன்னோக்கிய நகர்வாக அமையும்.



நான் இதற்கு முன்னரும் சபையில் குறிப்பிட்டது போன்று நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அந்த குழுக்கள் ஊடாகவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக் கிட்டும். சாதாரண சமூகமொன்றிற்கான தேசிய இயக்கம் இது தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையினை நான் ஏற்கனவே இச்சபையில் சமர்ப்பித்துள்ளேன்.

அவ்வாறே அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றினை நிறுவுவதற்கு நான் நடவ டிக்கை எடுப்பேன். முன்னெடுக்கும் நோக்கில் அனைவரினதும் ஆகக் குறைந்த பொது இணக்கப்பாடொன்றுடன் கூடிய வேலைத்திட்டம் ஒன்றினை இந்த தேசிய சபையின் ஊடாக தயாரித்துக் கொள்ள எம்மால் முடியும்.

பேதங்கள் மூலம் எமது நாடு முற்காலம் தொட்டு பின்னடைவுகளுக்கு உள்ளானது. நாம் இன ரீதியாக பிரிந்தோம், மொழி ரீதியாக பிரிந்தோம், சமய ரீதியாக பிரிந்தோம். கட்சி ரீதியாக பிரிந்தோம். வகுப்பு ரீதியாக பிரிந்தோம், பூகோள ரீதியாகவும் பிரிந்தோம் குல ரீதியாகவும் பிரிந்தோம்.

சில தரப்பினர்கள் இப்பிரிவினை மேலும் விஸ்தரித்தனர். அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறான பிளவுகளை பயன்படுத்தினர். பிரித்து ஆள் வதன் அனுகூலத்தை அனுபவித்தனர். முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். இவ்வாறு இன ரீதியாவும் சமய ரீதியாகவும் பல்வேறு விதமான பிளவுகளை ஏற்படுத்தி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு முயற்சித்தனர்.

1977 இல், அரசியலில் பிரவேசித்த நாள் முதல் எனக்கு தேவைப்பட்ட ஒரு விடயம் இவ்வாறான பிரிவுகளற்ற இலங்கை யெனும் ஆளடையாளத்தைக் கொண்ட சமூகமொன்றினை உருவாக்குவதாகும். ஒருதாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக வாழக்கூடிய தேசமொன்றை உருவாக்குவதாகும்.

இம்முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டதன் காரணமாக நான் அரசியல் ரீதியாக தோல்விகளைச் சந்தித்தேன். சிங்களப் பேரினவாதிகளின் மாத்திரமன்றி, தமிழ், முஸ்லிம் பேரினவாதிகளின் விமர்சனங்களுக்கு ஆளானேன். இனவாதிகளுக்கும். சமயவாதிகளுக்கும் எதிராகத் தொடர்ச்சியாக ஈடுபட்டமையால் சில அரசியல் கட்சிகள் என்னை தேசத்துரோகியாகவும் சமய எதிரியாகவும் அவதூறுக்கு உட்படுத்தின

எனினும், நான் எனது கொள்கையில் இருந்து விலகிச் செல்லவில்லை. ஒரு போதும் நான் அந்தக்கொள்கையிலிருந்து விலகவும் மாட்டேன்.

இன்று இளம்பராயத்தில் பெரும்பாலானவர்கள் எனது அந்தக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள் இனவாதத்திற்கும் சமயவாதத்திற்கும் எதிராகக் கோம் எழுப்புகின்றனர்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் உள்ளிட்ட அனைத்து இனங்களுக்கும் சமத்துவமாக கவனித்தல் வேண்டும் என சிங்கள இளைஞர், யுவதிகள் கூறுகின்றனர். சுமார் ஐந்து தசாப்த காலமாக நான் இச்சமூகத்துக்கு விளங்க வைப்பதற்கு முயற்சித்த சத்தியத்தை இன்று இளம் பராயத்தினர் புரிந்து கொண்டுள்ளமையானது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்



இந்த இளைஞர், யுவதிகளின் ஒத்துழைப்புடன், முழு நாட்டையும் அக்கொள்கையின் பக்கம் ஒன்றுதிரட்டுவதற்கான வாய்ப்பு தற்போது எமக்கு கிடைத்துள்ளது. இன, மத, கட்சி, குலம் உள்ளிட்ட அனைத்து வேதங்களையும் ஒழிப்பதற்கு வாய்ப்புக்குக் கிட்டியுள்ளது. அந்த பேதங்கள் காரணமாக சில சமயங்கள் படுகின்ற துன்பத்தை ஒழிப்பதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. திறமை மற்றும் தேர்ச்சி மூலம் நபர்களின் எதிர்காலப் பயணத்தைத் தீர்மானிப்பதற்குகான அடித்தாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அனைத்துப் பிரசைகளும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதற்கான பின்னணி ஏற்பட்டுள்ளது.

இங்கு பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும். போரின் மூலம் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன. வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது.

வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையினை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர் பெண்கள். இன்னமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், ஏனைய வித்தியாசங்கள், குறைபாடுகள் பலவற்றிற்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்நிலையை மாற்றியமைத்தல் வேண்டும். அதற்குத் தேவையான அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது.

அவ்வாறே இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி என்பவற்றினை சமூகத்தில் இருந்து முழுமையாக ஒழிப்பதும் கட்டாயமான ஒன்றாகும். இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான தேசியக் கொள்கை ஒன்றினை நாம் அமுல்படுத்துவேன். இதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் நிதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுவரும் நிலையில் உள்ளன. அவ்வாறே சர்வதேச நாணய நிதியத்துடனும் ஊழல் ஒழிப்பு பற்றிய இணக்கப்பாடொன்றுக்கு வருவோம்.

இந்த அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு முழுமையான அரசியல் மறுசீரமைப்புத் திட்டமொன்று தேவைப்படுகின்றது. அந்த மறுசீரமைப்பை எனது பதவிக்காலத்தினுள் நான் மேற்கொள்வேன். எனினும், அது எனது தனிப்பட்ட அபிப்பிராயத்திற்கு அமைவாக அல்ல. இளைஞர்களின், பெண்களின் மற்றும் ஏனைய மக்களின் கருத்துக்களை அடிப்படையாக் கொண்டு மக்களினதும் நாடாளுமன்றத்தினதும் இணக்கப்பாட்டிற்கு அமையவே அதனை மேற்கொள்வேன்.

மேற்கொள்ள வேண்டிய சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்கள் என்ன என்பது பற்றி தீர்மானிப்பதற்காக மக்கள் சபை ஒன்றினை நிறுவுவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். அரசியல் கட்சிகள், நானாவித அமைப்புகள் மற்றும் இது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற அனைத்து நபர்களதும் கருத்துக்களை மக்கள் சபையின் ஊடாக விசாரிப்பதற்கான பொறிமுறை ஒன்றினை உருவாக்குவேன். இதற்காக கருத்துக்களைப் பெற்றுத்தருமாறு போராட்டத்துடன் தொடர்புடைய இளைஞர்களிடமும், தொடர்புபடாத இளைஞர்களிடமும் நான் முக்கியமாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எமது நாட்டின் ஜனாதிபதி முறைமையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா? நாட்டுக்கு மிகவும் பொருத்தமான முறைமை எது? ஆட்சி முறையானது எவ்வாறான மறுசீரமைப்புகளுக்கு உட்பட வேண்டும்? உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மக்கள் சபையின் ஊடாக கலந்துரையாடப்படும். நாட்டுக்கு மிகவும் பொருத்தமான முறைமை தொடர்பாக தேசிய இணக்கப்பாடொன்றுக்கு வந்ததன் பின்னர் அம்முறைமையைச் சட்டமாக வரைந்து நடைமுறைப்படுத்துவேன்.

இவ்வாறான தேசிய இணக்கப்பாட்டுக்கு வருவது கட்டாயமான ஒரு விடயமாகும். அதுபற்றி நான் சிறிது விளக்க விரும்புகின்றேன். நமது நாட்டில் பல ஜனாதிபதி தேர்தல்களின் போது முன்வைக்கப்பட்ட பிரதான வாக்குறுதி தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்படும் என்பதாகும். எனினும், அந்த வாக்குறுதியை வழங்கி அதன் மூலம் அதிகாரத்திற்கு வந்த எவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவில்லை. மாறாக ஒருவர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை ஒழித்தாலும், அதன் பின்னர் ஆட்சிக்கு வரும் கட்சியினால் மீண்டும் அதனை மாற்றியமைக்கும் இயலுமை உள்ளது. அதனால் தான் நாங்கள் மக்கள் சபை ஊடாக பொதுவான தேசிய இனக்கப்பாடு ஒன்றிற்கு வரவேண்டிய தேவையுள்ளது.

மக்கள் சபை என்பது முழுமையாக சுயாதீனமாக செயற்படும் ஒரு நிறுவனமாகும். அரசு அதற்குத் தேவையான வளங்களை வழங்குவதை மாத்திரமே மேற்கொள்ளும். அதன் பணிகளுக்கு அல்லது தீர்மானங்களுக்கு அரசின் விதவித தாக்கமும் இருக்காது. மக்கள் சபையின் அமைவு பற்றி நாம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி தீர்மானிப்போம் – என்றார்.